வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer - மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER - ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER - வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 18.09.2023 திங்கட்கிழமை | இதழ் : 282 | பக்கங்கள் : 16







# திலீபன் நினைவு ஊர்திமீது பேரினவாத குழு தாக்குதல்!

## திருகோணமலையில் நேற்று சம்பவம்

## கஜேந்திரன் எம். பி., காண்டீபன் மீதும் கொட்டன்களால் கொடூர தாக்குதல்!

**திருகோணமலை, செப்ரெம்பர் 18**

**தியாக தீபம் திலீபனின் நினைவு ஊர்தியை திருகோணமலையில் வழிமறித்த பேரினவாதக் குழு அதனை அடித்து நொறுக்கியது. அத்துடன், அதில் பயணித்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மீது கொடூரமான தாக்குதலையும் நடத்தியது.**

திருகோணமலை - கொழும்பு வீதியில், சர்தாபுர பகுதியில் இந்த கொலைவெறி தாக்குதல் நடந்தது.

தியாகி திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி பொத்துவிலில் இருந்து பயணத்தை ஆரம்பித்து வடக்கு நோக்கி பயணித்தது. இந்நிலையில், நினைவு ஊர்தி நேற்று திருகோணமலை மூதூர், சேனையூர், தம்பலகாமம் பகுதிகள் ஊடாக திருகோணமலை நகரத்தை நோக்கி, திருகோணமலை - கொழும்பு வீதியில் பயணித்துக்

11



## கிளிநொச்சியில் மணல் அகழ்வு தடுப்பதாக அதிகாரிகள் உறுதி!

*கிளிநொச்சி, செப். 18*

இரணைமடு பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வந்த சட்ட விரோத மணல் அகழ்வு பூரணமாக தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. இதேபோன்று ஏனைய பகுதிகளிலும் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வுகளும் பூரணமாக கட்டுப்படுத்தப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அதிகாரிகளினால் உத்தரவாதமளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்துவது தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

11

## தனிமைப்படும் முதியோர்கள்!

*கொழும்பு, செப். 18*

நாட்டில் எதிர்கால முதியோர் சமூகம் தனித்து வாழவேண்டிய நிலை உருவாகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் வாழும் 18 முதல் 25 வயதுக்குட்பட்ட இளைஞர்களில் 80 வீதமானவர்கள் மற்றும் 25 முதல் 36 வயதுக்குட்பட்ட இளைஞர்களில் 70 வீதமானவர்களும் வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர் என்று ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

களனிப் பல்கலைக்கழக கலைப்பீட பேராசிரியர் பிரசாதினி கமகே உள்ளிட்ட ஆய்வுக் குழுவினால் இந்த ஆய்வு

11

## தமிழரின் நினைவுகூரும் உரிமைகூட மறுக்கப்படுவதற்கான சாட்சியம்!

### பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டனம்

*யாழ்ப்பாணம், செப். 18*

திலீபன் அண்ணாவின் உருவப்படத்தை தாங்கி வந்த ஊர்தியானது தமிழர் தலைநகரிலேயே தாக்கப்பட்ட இந்தச் சம்பவமானது வட, கிழக்கு மாகாணங்களில் இன்னமும் தமிழ் மக்களுக்கு அவர்களது குறைந்தபட்ச நினைவு கூரும் உரிமை கூட மறுக்கப்பட்டு வருகின்றது என்பதற்கு சாட்சியமாகும் என்று வடக்கு, கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு நடத்திய ஊடக சந்திப்பில் வடக்கு - கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஊடக பேச்சாளர் இ. தர்ஷன் கண்டனத்தை

11

## நீதிமன்றம் அருகே துப்பாக்கி சூடு: 6 வயது சிறுமி பலி; தந்தை காயம்!

*கொழும்பு, செப். 18*

மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றம் அருகே நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 6 வயது சிறுமி உயிரிழந்தார். அவரின் தந்தை படுகாயமடைந்துள்ளார்.

மருதானை - மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றத்துக்கு அருகில் துப்பாக்கிப் பிரயோகம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே துப்பாக்கி சூடு நடத்தியுள்ளதாக பொலிஸார்

11

## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் மீள் விசாரணை அவசியமற்றது!

### வெளிவிவகார அமைச்சர்

*கொழும்பு, செப். 18*

உயிர்த்த ஞாயிறுதின குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் மீண்டுமொரு விசாரணை அவசியம் இல்லை என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல்கள் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்று ஏற்கனவே

11

## சனல் 4 காணொலி குறித்த விசாரணை தெரிவுக் குழுவை நிராகரிக்கின்றோம்

### ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

*கொழும்பு, செப். 18*

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் சம்பந்தமாக சனல்-4 ஊடகம் வெளியிட்டுள்ள காணொலி தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் எஸ். ஐ. இமாம் தலைமையில் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவை முழுமையாக நிராகரிப்பதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

சனல்-4

11

## இப்படியும் நடக்கிறது

ஒரு விடயத்தை சொல்கின்ற போது அந்த விடயம் குறித்த தெளிவான பார்வை ஒன்று நமக்கு இருக்கவேண்டும்.

எதைச்சொல்ல வருகின்றோமோ அதனை தெளிவாக சொல்ல வேண்டும்.

'36 ஆண்டுகளுக்கு முன்விட்ட தவறுகளைப் புரிந்து கொண்டு ஈழ தேசத்தைப் பாதுகாக்கவும் அதனூடாக தென்கோடியில் இந்தியாவின் பாதுகாப்புக்கு நட்புமிக்க சக்தியாக ஈழத் தமிழரின் தாயகத்தை உருவாக்கவும் தயாராகவேண்டும். அதற்கான முதல் நிலை நடுநிலையாளராக இந்தியா தன்னை உருவாக்கிக்கொள்ள வேண்டும்.'

மேற்கண்டவாறு திருவாய்மலர்ந்திருப்பவர் நமது சிவஞானம் சிறிதரன் எம். பி.

ஈழத்தமிழரின் தாயகத்தை உருவாகத் தயாராக வேண்டும் என்று கோரிக்கை விடுத்துவிட்டு அதற்காக முதல்நிலை நடுநிலையாளராக இந்தியா தன்னை உருவாக்கிக் கொள்ளவேண்டும் என்கிறார்.

நடுநிலையாளராக என்றால் என்ன என்பது புரியவில்லை. தமிழரின் தாயகத்தை உருவாக்கும் தமிழரின் போராட்டத்தில் நடுநிலையாளராக - அதாவது ஆதரவும் இன்றி எதிர்ப்பும் இன்றி இருக்கவேண்டும் என்கிறாரா?.

சிறிதரன் எம். பி. கிளிநொச்சி மக்களின் பிரதிநிதி மாத்திரமல்ல. இன்று தமிழ் மக்களின் பிரதான அரசியல் இயக்கமான தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் பதவியில் குறிவைத்திருக்கின்ற ஒருவர். அத்தகைய முக்கிய பதவியில் அமரவேண்டும் என்று விரும்புகின்ற ஒருவர் எந்த விடயத்திலும் தெளிவான பார்வையுடன் தீர்க்கமான முடிவை எடுக்கக்கூடியவர் என்று தன்னை நிறுவவேண்டியவர்.

ஆனால், எங்கே இந்தியாவிடம் தமது கோரிக்கையை முன்வைக்கின்றபோதுகூட அவருக்கு இது பிடிக்குமா இவருக்கு அவ்வாறு சொல்வது பிடிக்குமா என்று தடுமாறிக்கொண்டு கோரிக்கையை முன்வைப்பது புத்திசாலித்தனமானது அல்ல.

தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றிய சிறிதரன், திலீபனின் கோரிக்கைகள் இன்றுவரை நிறைவேற்றப்படாமலே இருக்கின்றன என்றும் தெரிவித்திருக்கிறார்.

திலீபன் தனது உண்ணாவிரதத்தை ஆரம்பித்த போது ஐந்து அம்சக் கோரிக்கைகளை அப்போது அமைதி காக்கும் படையாக இலங்கையில் இருந்த இந்தியப் படையினரிடம் முன்வைத்தார்.

- மீளக்குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாக திட்டமிடும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.
- சிறைக் கூடங்களிலும் இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும்.
- அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும்.
- ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயு தங்கள் முற்றாகக் களையப்படவேண்டும்.
- தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்படவேண்டும்.

மேலே சொல்லப்பட்ட ஐந்து கோரிக்கைகளையே திலீபன் முன்வைத்தார்.

இந்தக் கோரிக்கைகளே இன்னமும் இருந்து கொண்டிருக்கின்றன என்கிறார் சிறிதரன்.

இப்போது அதுபற்றி மேலும் உள்ளே சென்று ஆராய்வது அல்ல எமது நோக்கம். ஈழத்தமிழரின் தாயகத்தை உருவாக்க தயாராக வேண்டும் என்று கூறும் சிறிதரன், அதற்காக இந்தியா நடுநிலையாளராக இருக்கவேண்டும் என்கிறார். அப்படியெனில் எமது தாயகக் கோரிக்கைக்கு இதுவரை யார் ஆதரவாக இருக்கின்றார்கள், யார் எதிராக இருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. ஆனால், இந்தியா நடுநிலையாளராக இருக்கவேண்டும் என்று அவர் கோருவதிலிருந்து இந்தியா இப்போது எதிரணியில் இருப்பதாக அவர் கருதுவதாகவே எண்ண வேண்டியிருக்கின்றது. அவர் எதற்காக இந்தியாவின் ஆதரவை கோரவில்லை என்பதும் தெரியவில்லை.

**- ஊர்க்குருவி.**

# கல்வி கற்கும் காலத்தை ஓராண்டு குறைக்க திட்டம்!

## பிரதமர் தினேஷ் குணவர்த்தன

கொழும்பு, செப். 18

கல்விக் காலத்தை ஓராண்டு குறைக்க பேச்சு நடந்து வருகிறது. அதனை செய்ய முடியுமாக இருந்தால், எமது பிள்ளைகள் ஒரு வருடம் முன்னதாகவே பட்டப் படிப்பை நோக்கி செல்ல முடியும். மேலும், பல்வேறு துறைகளுக்கு செல்ல முடியும். அந்தச் சவாலை நாம் வெற்றி கொள்ள வேண்டும் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

விசாகா கல்லூரியில் இடம் பெற்ற பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஒரு கல்லூரியை விட்டு வெளியேறி, உலகளாவிய அறிவை அணுகுவதற்கான மையமாக இருக்கும் பல்கலைக்கழகத்துக்கு செல்கிறோம், இதன் மூலம் நாட்டுக்கு பல நன்மைகளை சேர்க்கிறோம். அதனால்தான் பாடசாலைக்கும் பல்கலைக்கழகத்துக்கும் இடையே வித்தியாசம் இருக்கிறது.

எங்களைப் போலவே, பெற்றோர்களும் பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளும் உரிய நேரத்தில் பரீட்சைகள் நடத்தப்பட வேண்டும் உரிய நேரத்தில் பெறுபேறுகளைப் பெற வேண்டும், உயர்கல்விக்கான கதவுகள் சரியான நேரத்தில் திறக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள். இந்த கால சட்டகத்தை உறுதியுடன் செயல்படுத்த அரசு உறுதி பூண்டுள்ளது. இது அவசியமானது.

கல்விக் காலத்தை ஓராண்டு குறைக்க பேச்சு நடந்து வருகிறது.



அதனை செய்ய முடியுமாக இருந்தால், எமது பிள்ளைகள் ஒரு வருடம் முன்னதாகவே பட்டப் படிப்பை நோக்கி செல்ல முடியும். மேலும், பல்வேறு துறைகளுக்கு செல்ல முடியும். அந்தச் சவாலை நாம் வெற்றி கொள்ள வேண்டும் என பிரதமர் தெரிவித்தார்.

பரீட்சைகள் ஆணையாளர் எச். ஜே. எம். சி. ஜயசுந்தர, அதிபர் மனோமி செனவிரத்ன, ஆசிரியர்கள் தற்போதைய மற்றும் பழைய மாணவிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஐ)

# தென்சீன கடல் வலய மாநாடு ஒக்ரோபரில் இலங்கையில்!

கொழும்பு, செப். 18

தென்சீனக் கடல் வலய 8ஆவது ஷென்ஸன் வட்டமேசை மாநாடு எதிர்வரும் ஒக்ரோபர் 24, 25 மற்றும் 26ஆம் திகதிகளில் இலங்கையில் நடைபெறும்.

இந்த மாநாடு கொழும்பு, ஹுனுபிட்டிய கங்காராமை விகாரையால் நடத்தப்பட இருப்பதோடு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் ஆரம்ப நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த வட்டமேசை மாநாட்டின் பூர்வாங்க ஏற்பாடு தொடர்பான கலந்துரையாடல் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவின் தலைமையில் நடைபெற்றது.

வருடாந்தம் நடைபெற்று வரும் சீனாவின் ஷென்ஸன் வட்டமேசை மாநாடு இம்முறை "ஒற்றுமையுடன் ஒன்றாக பயணித்து பட்டுப்பாதையின் ஞானத்தை பெறுவோம்" ( என்ற தொனிப் பொருளின் கீழ் 22 நாடுகளின் பங்கேற்புடன் இலங்கையில் நடைபெறும் என்றும் இதன்போது அறிவிக்கப்பட்டது.

மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதற்காக இது தொடர்புடைய அரசாங்க நிறுவனங்களின் ஊடாக நிறைவேற்றப்பட வேண்டிய விடயங்கள் குறித்தும் ஆராயப்பட்டது.

பௌத்த மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பௌத்த மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட தொடர்புள்ள அரச நிறுவன அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றார்கள். (ஐ)

# அமைச்சர் டக்ளஸின் திட்டங்கள் எமது வளங்களை அழிக்கின்றது

## பொன்னாவெளி போராட்டக்காரர்கள் தெரிவிப்பு

கிளிநொச்சி, செப். 18

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் திட்டங்கள் எல்லாம் எமது வளங்களை அழிப்பதாகவே அமைகிறது என கிராஞ்சி, பொன்னாவெளி அனைத்து மக்கள் ஒன்றியத் தலைவர் வல்லிபுரம் பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை 46ஆவது நாளாக பொன்னாவெளி பிரதேசத்தில் நடந்த சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிரான போராட்டத்தை மேற்கொண்டுவரும் பிரதேச மக்கள் சார்பாக கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும், பொன்னாவெளி கிராமத்தில் ரோக்கியோ சிமெந்து நிறுவனத்தால் சுண்ணக்கல் அகழ்வுக்கான பூர்வாங்க வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. இதற்கு கிராஞ்சி, பொன்னாவெளி கிராம மக்களாகிய நாம் எங்களது கடும் எதிர்ப்பை தெரிவித்து நிற்கின்றோம். அதனால்தான் இன்று 46ஆவது நாளாக நாம் தொடர்ச்சியான பேராட்டத்தில் ஈடுப்பட்டுள்ளோம்.

எங்கள் கிராமங்கள் அழிக்கப்படுவதனை நாம் அனுமதிக்கமாட்டோம். மக்களின் நலன்களுக்கு மாறான எந்த திட்டத்தையும் எமது மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் கொண்டு வரப்படுகின்ற திட்டங்கள் எமது வளங்களை அழிப்பதாகவே நாம் கருதுகின்றோம். கடல் அட்டைப் பண்ணை, சிமெந்து தொழிற்சாலைக்கான சுண்ணக்கல் அகழ்வு என்பன இதற்கு உதாரணங்களாகும். இதன்காரணமாகதான் மக்களாகிய நாம் இதற்கு எங்களுடைய கடும் எதிர்ப்பை தெரிவிக்கின்றோம்.

யுத்தம் காரணமாக இந்தப் பிரதேசங்களிலிருந்து இடம் பெயர்ந்து சென்றோம். மீண்டும் சொந்த பிரதேசங்களுக்கு திரும்பி வந்தோம். ஆனால், சுண்ணக்கல் அகழ்வு இடம்பெற்றால் நாம் எங்கள் ஊர்களை விட்டு இடம் பெயர்ந்து செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். அவ்வாறு இடம்பெயர்ந்தால் மீண்டும் நாம் எமது சொந்த ஊர்களுக்கு திரும்ப முடியாது அவ்வாறான ஒரு நிலைமையே ஏற்படும் - என்றார். (ஐ)

# மாணவர்களுக்கு ஆபாச படம் இரத்தினபுரியில் ஆசிரியர் கைது!

கொழும்பு, செப். 18

பாடசாலை மாணவர்களுக்கு தொலைபேசியில் ஆபாச காணொலிகளை காண்பித்த குற்றச்சாட்டில் ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரத்தினபுரி - ஓபநாயக்க பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் தெயியந்தர பகுதியைச் சேர்ந்த 34 வயதுடையவர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

கைதான நபர் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
18.09.2023 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், புரட்டாதி 01

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழர் தரப்பு புரிந்துகொள்ள வேண்டியது

முள்ளிவாய்க்காலுக்கு பின்னரான தமிழர் அரசியல் என்பது நீதியை வேண்டிநிற்கும் அரசியலாகவே கடந்த பதினான்கு வருடங்களாக நகர்ந்திருக்கின்றது. ஆனால், நீதிக்கான தமிழர் அரசியல் நகரவில்லை. மாறாக ஊர்ந்திருக்கின்றது என்னும் முடிவுக்கே வரவேண்டியிருக்கின்றது. ஏனெனில், கடந்த பதினான்கு வருடங்களில் தமிழரின் எதிர்பார்ப்புகள் சிறிதளவில்கூட நிறைவேற்றப்படவில்லை. ஆனால், இந்த பதினான்கு வருடகால அரசியல் முழுவதும் மேற்குலக தலையீட்டைக் கோரியதாகவும் சர்வதேச சட்டங்களின் ஊடாக நீதியை பெறுவதற்கான முயற்சியாகவுமே நகர்ந்திருந்தது.

மனித உரிமைகள் சார்ந்த அழுத்தங்களால் மாற்றங்களை ஏற்படுத்த முடியுமென்னும் நம்பிக்கையின் அடிப்படையிலேயே அனைத்து தரப்புகளும் செயல்பட்டிருந்தன. நாடு ஒரு மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியபோது அதனை பயன்படுத்தி அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டுமென்னும் கோரிக்கையும் தமிழர் பக்கத்திலிருந்து வெளிப்பட்டது. சர்வதேச நாணய நிதியம் இந்த விடயத்தில் அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டுமென்று கூட சிலர் கூற முற்பட்டனர். ஆனால் சர்வதேச நாணய நிதியம் மனித உரிமைகள் சார்ந்து உள் விவகாரங்களில் தலையீடு செய்வதில்லை.

ஆனால், தற்போது இடம்பெற்றுவரும் விடயங்களை நோக்கினால் தமிழர் தரப்பின் அனைத்து முயற்சிகளும் விழலுக்கிறைத்த நீராகவே பயனற்றுப் போயிருக்கின்றது. இலங்கைத் தீவில் தலையீடு செய்ய முற்படும் இலங்கையின் ஆட்சியாளருக்கு அழுத்தங்களை பிரயோகிக்க முற்படுவதாக நாங்கள் நம்பிக் கொண்டிருக்கும் இந்தியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் கொள்கை நிலைப்பாடு மிகவும் தெளிவானது. அதாவது, இந்த நாட்டின் பெரும்பான்மையை அந்நியப்படுத்திவிடக் கூடாது. அவ்வாறு அந்நியப்படுத்தினால் பின்னர் இந்த நாட்டில் தங்களின் மூலோபாய நலன்களுக்காக வலுவாக காலூன்றுவது இயலாத காரியமாகிவிடும் என்பதே அவர்களது நிலைப்பாடு. இந்த அடிப்படையிலிருந்துதான் அவர்கள் ஒவ்வொரு நகர்வையும் தீர்மானிக்கின்றனர்.

தமிழ் பக்கத்திலிருந்து அழுத்தங்களை போடுங்களென்று இந்தளவு தூரம் கத்திய பின்னரும்கூட, இலங்கையை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்கும் முயற்சிக்கே நாடுகள் உதவி வருகின்றன. ஏன்? ஏனெனில், இலங்கைத் தீவின் ஆட்சியை தீர்மானிக்கும் பெரும்பான்மை மக்களின் ஊடாகவே இலங்கையை நோக்குகின்றனர். அவ்வாறு அணுகாவிட்டால் இலங்கை தீவு தங்களின் செல்வாக்கு வளையத்திலிருந்த முற்றிலுமாக விலகிச் சென்றுவிடுமென்று கருதுகின்றனர்.

இதன் காரணமாகத்தான் தமிழர் பக்கத்திலுள்ள நியாயங்கள் ஒரு பொருட்டாக நோக்கப்படவில்லை. மூலோபாய நலன்களுக்கு முன்னால், நீதி இரண்டாம் பட்சமாகவே இருக்கின்றது. இத்தனை அனுபவங்களுக்கு பின்னரும் தமிழர் தரப்புக்கு இது புரியவில்லை என்றால் அரசியலை கையாளுவதாக கூறிக்கொண்டிருப்பதும் விழலுக்கு நீரிறைக்கும் முயற்சிதான். இதன் காரணமாகவே இருப்பதை உச்சபட்சமாக பயன்படுத்துவதன் மூலம் தமிழரின் இருப்பை பலப்படுத்த வேண்டுமென்று நாம் கோருகின்றோம்.

# யாழ். போதனாவில் சிறுமியின் கை அகற்றம் முழு அறிக்கை அடுத்த வாரம் கிடைக்கும்!

## சுகாதாரத் துறை அமைச்சர்

*கொழும்பு, செப். 18*

*யாழ். போதனா மருத்துவமனையில் சிறுமியின் கை அகற்றப்பட்டமை தொடர்பில் அடுத்த வார இறுதிக்குள் முழுமையான அறிக்கை தனக்கு கிடைக்கும் என்று சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.*

*யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 8 வயது சிறுமியான சாண்டில்யன் வைசாலியின் இடது கையில் பொருத்தப்பட்டிருந்த மருந்து ஏற்றுவதற்காக பொருத்தப்பட்ட கனூலா காரணமாக ஏற்பட்ட தாக்கத்தால் அவரது கை மணிக்கட்டுக்கு கீழ் அகற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் சுகாதாரத்துறை அமைச்சின் நடவடிக்ககைள் பற்றி வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில்,*

*சிறுமியின் கை அகற்றப்பட்டமை துரதிர்ஷ்ட வசமான நிகழ்வாகும். அந்த விடயம் சம்பந்தமாக வடக்கின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பல தரப்பட்டவர்கள் எனது கவனத்துக்கு கொண்டு வந்திருந்தனர்.*

*இதனையடுத்து எனது பணிப்புரையின் பேரில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ஊடான விசாரணைகள் உடனடியாகவே ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் அடுத்த வாரத்துக்குள் அந்த விசாரணைகள் பற்றிய முழுமையான அறிக்கை எனக்கு கிடைக்கவுள்ளது. அதன் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் பாரபட்சமின்றி முன்னெடுக்கப்படும் - என்றார். (ஐ)*

# தேசிய கல்வியியல் கல்லூரி அனுமதி தாமதமாகின்றது!

## தெரிவான மாணவர்கள் சாடல்

*கொழும்பு, செப். 18*

*தேசிய கல்வியியல் கல்லூரி மாணவர் அனுமதி கடந்த ஒகஸ்ட் 31இற்கு முன்னர் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்ட போதும் அதற்கான நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்படவில்லை என கல்வியியல் கல்லூரிக்கு தெரிவான மாணவர்கள் கோரிக்கை குற்றம்சுமத்தியுள்ளனர்.*

*இதுகுறித்து விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில், "தேசிய கல்வியியல் கல்லூரிகளின் அனுமதிக்காக 2019/2020 ஆண்டுகளில் உயர் தரத்தில் தோற்றியவர்கள் 2023 ஆம் ஆண்டு 1ஆம் , 2ஆம் மாதங்களில் நேர்முக தேர்வுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.*

*இதன்படி தெரிவு செய்யப்பட்ட 7 ஆயிரம் மாணவர்களின் பெயர் பட்டியல் 2023 ஜூலை வெளியானது. பதிவு செய்யும் நடவடிக்கைகளை ஒகஸ்ட் 31இற்கு முன்னர் நிறைவு செய்யுமாறு கல்வி அமைச்சின் செயலாளர், கல்வியியல் கல்லூரிகளின் பீடாதிபதிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.*

*இதற்கு முன்னர் பல தடவைகள் இவ்வாறு அறிவித்த போதிலும், இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் அதிகாரிகள் (கல்லூரி விரிவுரையாளர்கள்) சில கோரிக்கைகளை கல்வி அமைச்சிடம் முன்வைத்துத் தொடர்ந்தும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.*

*அதில், முக்கியமாக சம்பள முரண்பாட்டை தீர்க்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனவே கல்வி அமைச்சின் அறிவித்தல்கள் எதுவும் நடைமுறைப்படுத்தப்பட வில்லை. இதனால் கல்வியியல் கல்லூரிக்கு தெரிவான மாணவர்கள் பல இன்னல்களை எதிர்நோக்குகின்றனர்.*

*குறிப்பாக கல்வியியல் கல்லூரி கல்வியை நிறைவு செய்து வெளியேறும் போது 25, 26 வயதை எட்டுவதோடு, மாணவர்களை பதிவு செய்வது தொடர்பாக முறையான அறிவித்தல்கள் இல்லாமையால் பலர் தமது தொழில்களை கைவிட்டும், பலர் தொழில்களுக்கு செல்ல முடியாமல் இருப்பதாலும் குடும்பத்தில் பெரும் பொருளாதார சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.*

*மாணவர்களின் மன நிலையை கவனத்தில் கொண்டு அவர்களுக்கு ஒன்லைன் தொழில்நுட்பம் ஊடாக கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கல்வியியல் கல்லூரிக்கு தெரிவான மாணவர்கள் கோரிக்கை விடுகின்றனர்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)*

# திலீபன் நினைவாக குருதிக்கொடை முகாம்!

*யாழ்ப்பாணம், செப். 18*

*தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் உண்ணாநோன்பிருந்து உயிர் நீத்த தியாக தீபம் திலீபன் நினைவாக குருதிக் கொடை முகாம் நடைபெறவுள்ளது.*

*நாளை செவ்வாய்கக்கிழமை மாணவர் கட்டத் தொகுதி பல்கலைக்கழக பிரதான வளாகம், யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.*

*இதேபொன்று எதிர்வரும் 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொழில்நுட்ப பீடம், கிளிநொச்சி வளாகம், யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும். (ஐ)*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**செப்ரெம்பர் - 18 திங்கட்கிழமை**
**சோபகிருது வருடம் - புரட்டாதி 01**
**நல்ல நேரம் : 12.03 - 01.33**
**ராகு காலம் : 07.33 - 09.03**
**திதி : சதுர்த்தி**




**மேடம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். சொத்து சிக்கலில் ஒன்று தீரும்.

**இடபம்**
புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். சுற்றி இருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும்.

**மிதுனம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய் வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். வியாபாரத் தில் அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள்.

**கடகம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள் உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். குடும்பத்தில் பிரச்னை தீரும். வியாபாரத்தில் புதுஒப்பந்தங்களால் லாபம் அடைவீர்கள்.

**சிம்மம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பல வேலைகளையும் இழுத்துப்போட்டு பார்க்க வேண்டி வரும். அடுத்தவர்களை குறைக் கூறிக் கொண்டிருக்காமல் உங்களை மாற்றிக் கொள்ளப் பாருங்கள்.

**துலாம்**
குடும்பத்தை பற்றிய கவலைகள் வந்து போகும். புதிய வர்களை நம்பி ஏமாற வேண்டாம். செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும். திடீர் பயணாங்களால் அலைச்சல் அதிகரிக்கும்.

**விருட்சிகம்**
பெரியோரின் ஆசி கிட்டும். பெற்றோரின் ஆதரவு பெருகும். நெடுநாட்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். மனைவிவழியில் மதிக்கபடுவீர்கள். இனிமையான நாள்.

**தனுசு**
எதையும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். அதிகரிக்கும். அலுவலகத்தில் மரியாதைக் கூடும்.

**மகரம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் உண்டு. திடீர் பண வரவு உண்டு. புது முடிவுகள் எடுப்பீர்கள். நீண்டநாளாக நினைத்த இடத்திற்கு சென்று வருவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான வேலைகளை எல்லாம் கையில் எடுத்து கொள்ளாதீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை பகைத்து கொள்ளாதீர்கள். புதிய முயற்சிகள் தாமதமாகும்.

**மீனம்**
பிள்ளைகள் உங்கள் அருமையைப் புரிந்துகொள்வார்கள். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பயணங்களால் புத்துணர்ச்சி பெறுவீர்கள். மனைவி வழியில் ஆதரவு பெருகும்.

# இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்றும் வேலைநிறுத்தம்!

## ரூ. 5 ஆயிரம் கோடி வர்த்தகம் பாதிப்பு

இராமேஸ்வரம், செப். 18

இலங்கை கடற்படை சிறைப்பிடித்த மீனவர்கள் மற்றும் படகுகளை விடுவிக்கக்கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் இரு நாட்களாக வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால், சுமார் 5 ஆயிரம் கோடி ரூபாய் வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது.

இராமேஸ்வரத்தில் இருந்து கடந்த வாரம் மீன்பிடிக்க சென்ற ஒரு படகுடன் 8 மீனவர்களை இலங்கை கடற்படையினர் சிறைபிடித்தனர். இவர்கள் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.

இலங்கை அரசின் இந்த நடவடிக்கையை கண்டித்தும், மீனவர்கள் மற்றும் படகுகளை விடுக்க மத்திய, மாநில அரசுகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இராமேஸ்வரம் மீனவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதனை வலியுறுத்தி இராமேஸ்வரத்தில் மீனவர்கள் நேற்றுமுன்தினம் முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தை தொடங்கினர். இதனால் இராமேஸ்வரம் துறைமுகத்தில் 650 இற்கும் மேற்பட்ட விசைப் படகுகள் நிறுத்தப்பட்டுள்ளன. 5 ஆயிரம் மீனவர்கள் மற்றும் மீன்பிடி தொழிலை சார்ந்தவர்கள் என 25 ஆயிரத்திற்கும் மேற்பட்டோரின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

2ஆவது நாளாக நேற்றும் வேலை நிறுத்தம் நடந்தது. இதன் காரணமாக எப்போதும் பரபரப்பாக காணப்படும் இராமேஸ்வரம் துறைமுகம் வெறிச்சோடி காணப்பட்டது. கரையில் விசைப்படகுகள் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளன. இந்தப் போராட்டத்தால் இரு நாட்களில் சுமார் 5 ஆயிரம் கோடி ரூபாய் வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மதத்தை ஒழிப்பேன் என்று சொல்ல யாருக்கும் அதிகாரம் கிடையாது!

## மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன்

சென்னை, செப். 18

மதத்தை ஒழிப்பேன் என்று சொல்ல யாருக்கும் அதிகாரம் இல்லை. அமைச்சர் உதயநிதி பொறுப்பை உணர்ந்து பேச வேண்டும் என மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவுறுத்தியுள்ளார்.

சென்னையில் தணிக்கையாளர் சங்கத்தின் 90ஆவது ஆண்டு விழாவிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சனாதனம் குறித்து இங்கே அமைச்சர் ஒருவர் பேசியுள்ளார். இதில் நான் ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்கிறேன். அரசியல் சாசனத்தின்படி உறுதிமொழி ஏற்றுக் கொண்ட பிறகே ஒருவர் அமைச்சராக பொறுப்பேற்கிறார். பதவி ஏற்கும் போதே இரு தரப்பு மக்களுக்கும் பகைமையை ஏற்படுத்தும் வகையில் பேசக்கூடாது, எந்தவொரு செயலையும் செய்யக் கூடாது என்று உறுதிமொழி ஏற்றுக் கொண்ட பிறகே அமைச்சராகப் பொறுப் பேற்கிறோம்.



என்னதான் கொள்கை என்றாலும்கூட எந்தவொரு குறிப்பிட்ட மதத்தையும் அழிக்கப் போகிறேன் என்று சொல்லும் உரிமை அரசியல் சாசன சட்டப்படியும், பதவியேற்கும் போது ஏற்ற உறுதிமொழி படியும் யாருக்கும் இல்லை. குறிப்பாக ஒரு அமைச்சர் இப்படிப் பேச அதிகாரம் இல்லை. இது மிகவும் தவறான ஒன்று. அவர் என்ன பேசினார் என்று ஊடகங்களிடம் இருக்கிறது.

பொது மேடையில் வைத்து அமைச்சர் என்ன சொன்னார். இது சனாதன எதிர்ப்பு மாநாடு இல்லை. சனாதன ஒழிப்பு மாநாடு என்கிறார். அப்படிப் பேசிவிட்டு இப்போது எதையும் ஒழிக்க வேண்டும் என்று சொல்லவில்லை என்கிறார். இப்படியெல்லாம் பேசுவது சரியானதா? நாம் அனைவரும் பேசும் போது பொறுப்பாக பேச வேண்டும். பேசும் முன்பு யோசித்து பேச வேண்டும். உணர்ச்சிவசப்பட்டுப் பேசாமல், என்ன பேசுகிறோம் என்பதை யோசித்து பேசவேண்டும்.

நீங்கள் எந்தளவுக்கு இகழ்ச்சியாகப் பேசினாலும் அவர்கள் வேலையைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். அதுவே சனாதன தர்மம். இவர்கள் எதுவும் செய்ய மாட்டார்கள் என்பதாலேயே இதுபோல தொடர்ந்து பேசி வருகிறார்கள். அவர்கள் வேறு எந்த மதம் குறித்தாவது பேசி இருக்கிறார்களா. அதற்கு முதுகெலும்பு இல்லாதவர்கள் இவர்கள். மற்ற மதங்களில் குறைகளே இல்லையா? அவை குறித்துப் பேசத் தைரியம் இருக்கிறதா" - என்றார். (ஐ)

## கோவை கார் குண்டு வெடிப்பு;

# தமிழகத்தில் 26 இடங்களில் அதிகாரிகள் சோதனை!

கோவை, செப். 18

கோவை கார் வெடிப்பு சம்பவம் தொடர்பாக தமிழகத்தில் 26 இடங்களில் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் (என். ஐ. ஏ.) நேற்று முன் தினம்சோதனை மேற்கொண்டனர்.

கோவையில் கடந்த ஆண்டு ஒக்ரோபர் கோட்டை ஈஸ்வரன் கோயில் அருகில் கார் ஒன்று வெடித்தது. இதில், அதனை செலுத்தி வந்த ஜமேஷா முபின்(28) என்பவர் உயிரிழந்தார்.

இதுகுறித்து தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் நடத்திய விசாரணையில், கார் வெடிப்பு சம்பவம், பயங்கரவாத தாக்குதல் என்பது தெரிய வந்தது. இதையடுத்து, ஜமேஷா முபினுடன் தொடர்பில் இருந்த 11 பேரை கைது செய்தனர். தொடர்ந்து, அவர்களின்வீடுகள் மற்றும் அவர்களுக்குச் சொந்தமான இடங்களில் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர்.

இந்நிலையில், கடந்த மாதம் கோவை உக்கடம் பகுதியில் இருவரை என். ஐ. ஏஅதிகாரிகள் கைது செய்தனர். அவர்களிடம் நடத்திய விசாரணையில், கோவை குனியமுத்தூர் பகுதியில் செயல்பட்டு வரும் அரபிக் கல்லூரி சம்பந்தப்பட்டவர்களுக்கும், கோவை கார் குண்டு வெடிப்பு சம்பவத்துக்கும் தொடர்பிருக்கலாம் என்றும் என். ஐ. ஏ. அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து, தமிழகத்தில் 26 இடங்கள் மற்றும் தெலங்கானா மாநிலம் ஹைதராபாத், சைபராபாத்தில் 5 இடங்கள் என மொத்தம் 31 இடங்களில் என். ஐ. ஏ. அதிகாரிகள் நேற்று ஒரே நேரத்தில் சோதனை மேற்கொண்டனர்.

இந்த சோதனையில், பல ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன், 60 இலட்சம் இந்திய ரூபா, 18 ஆயிரத்து 200 அமெரிக்க டொலர் என்பவையும் கைப்பற்றப்பட்டன. (ஐ)

# கொக்குத்தொடுவாய் போல வடக்கு, கிழக்கில் மேலும் மனித புதைகுழிகள் காணப்படலாம்!

## மாவை சேனாதிராசா தெரிவிப்பு



யாழ்ப்பாணம், செப். 18

**முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி போன்று வடக்கு, கிழக்கில் மேலும் பல மனிதப் புதைகுழிகள் காணப்படலாம் என்று இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை. சோ.சேனாதிராசா அச்சம் வெளியிட்டுள்ளார்.**

அத்துடன், ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச தரப்பினர் தலையீடுகளைச் செய்து, துறை சார்ந்த நிபுணர்களின் ஆய்வுகள் முன்னெடுக்கப்படவேண்டியது அவசியம் எனவும், அதன் மூலம் தமிழின அழிப்பு நடைபெற்றது என்பது உறுதியாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயம் சம்பந்தமாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொக்குத்தொடுவாயில் மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டு அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் 17 எலும்புக்கூடுகள் கிடைத்துள்ளன. அவை தொடர்பில் ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு உண்மைகள் கண்டறியப்பட வேண்டியது அவசியமாகிறது.

இதேவேளை, வடக்கு, கிழக்கில் அசாதாரண காலத்தில் கடத்தப்பட்டவர்கள், காணாமலாக்கப்பட்டவர்கள், சரணடைந்தவர்கள் என்று ஆயிரக்கணக்கானவர்களுக்கு என்ன நடந்தது என்பது தற்போது வரையில் வெளிவராத நிலைமையிலேயே உள்ளது.

இந்நிலையில், வடக்கு, கிழக்கில் கொக்குத்தொடுவாய் போன்று மேலும் பல மனித புதைகுழிகள் இரகசியமாக காணப்படலாம் என்ற அச்சம் எமக்கு உள்ளது. ஆகவே, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மற்றும் சர்வதேச தரப்பினர், வடக்கு, கிழக்கில் ஆய்வுகளை மேற்கொள்வதற்கான தீர்மானத்தை விரைந்து எடுத்து, துறை சார்ந்த நிபுணத்துவம் வாய்ந்தவர்களை பங்கேற்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அதன் மூலம் தமிழினத்துக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் வெளிப்படுவதுடன், திட்டமிட்ட வகையில் இன அழிப்பு நடைபெற்றுள்ளது என்பதும் உறுதிப்படுத்தப்படும். மேலும், இன அழிப்புச் செய்யப்பட்ட சமூகத்துக்கான இறுதி நீதியாக இன விடுதலையே வழங்கப்பட வேண்டும். இதனை அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொள்வதற்கான வாய்ப்பாகவும் இருக்கும்.

எனவே, மனித புதைகுழி விடயத்தில் உள்நாட்டு ஆய்வுகள், தடய சேகரிப்புக்களுக்கு அப்பாலான நடவடிக்கைகள் அவசியம் - என்றார். (ஐ)



# மக்கள் தானமாக அளித்த பணத்தை ஆலய திருப்பணிக்கு வழங்கிய நபர்!

யாழ்ப்பாணம், செப். 18

பொது மக்கள் தனக்கு தானமாக அளித்த பணத்தை சேர்த்து வைத்திருந்து அதனை வண்ணை வரதராஜ பெருமாள் ஆலய புனருத்தாரண பணிக்காக வழங்கியுள்ளார்.

சேமித்த 2 இலட்சம் ரூபாயை அவர் இவ்வாறு ஆலய திருப்பணிக்காக வழங்கியுள்ளார்.

இந்த நன்கொடையை அளித்தவர் ஆலயத்துக்கு வருபவர்களால் பாபுஜி என்று அழைக்கப்படுகிறார். ஆலயத்தில் தனியாக அமர்ந்திருக்கும் அவர் யாசகம் என்று யாரையும் கேட்பதில்லை. எனினும், ஆலயத்தில் வழிபடும் மக்கள் தாமாக அளிக்கும் பணத்தை மறுப்புக்கூறாமல் பெற்றுக் கொள்வார்.

இவ்வாறு சேர்த்த பணத்தையே அவர் ஆலயத்தின் நிர்மாணப் பணிக்காக நேற்று ஞாயிற்றுக்கிழமை நிர்வாகத்திடம் கையளித்தார். (ஐ)

# கடலில் விழுந்து உயிரிழந்த மீனவரின் சடலம் கரை வந்தது!

வடமராட்சி, செப். 18

மீன்பிடிப்பதற்கு நேற்று முன்தினம் படகில் கடலுக்கு சென்ற மீனவர் ஒருவர் கடலில் விழுந்து உயிரிழந்தார்.

அவரின் சடலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 1. 30 மணிக்கு பருத்தித்துறை துறைமுகத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பகுதியில் இருந்து நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் மீன்பிடிக்கச் சென்ற திருகோணமலையைச் சேர்ந்த 44 வயதுடைய ஆர். பி. நிமல் கருணாரத்ன என்ற மீனவரே நடுக்கடலில் தவறி வீழ்ந்து உயிரிழந்தார்.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-02-03)

# பட்டப்பகலில் வீடுடைத்து 10 பவுண் நகைகள் திருட்டு!

வடமராட்சி, செப். 18

பட்டப்பகலில் வீட்டுக் கதவை உடைத்து நுழைந்து 10 பவுண் தங்க நகைகள் மற்றும் 30 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பணம் திருடப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் பருத்தித்துறை ஐயனார் கலட்டி பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் இருந்த வயோதிப மாது அயல் வீட்டில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றுக்கு சென்று விட்டு மீண்டும் வீட்டுக்கு வந்தபோதே இந்தத் திருட்டு இடம்பெற்றமை தெரியவந்தது.

தங்கச்சங்கிலி, காப்பு அடங்கலாக 10 பவுண் தங்கநகைகள் ரொக்கப்பணம் என்பன திருட்டுப் போயிருந்தன என்று பொலிஸில் தெரிவிக்கப் பட்டது.

பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-2)

# சீனக் கப்பலின் வருகை தொடர்பான பரிந்துரை வெளிவிவகார அமைச்சிடம்!

## பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, செப். 18

சீனாவின் ஷியான்-6 கப்பலின் வருகைக்கான அனுமதி உள்ளிட்ட விடயங்களை வெளிவிவகார அமைச்சே தீர்மானிக்கவுள்ளதாக தெரிவித்துள்ள பாதுகாப்பு அமைச்சு தமது குறித்த கப்பல் தொடர்பான பரிந்துரைகளை தாம் அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

சீனாவுக்குச் சொந்தமான ஷியான்-6 கப்பலானது எதிர்வரும் மாதம் 25ஆம் திகதி இலங்கைக்கு வருகை தருவதாக சீனாவால் அறிவிக்கப்பட்டது. இதற்கான அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்தபோதும், பின்னர் வெளிவிவகார அமைச்சு அனுமதிக்கான விடயத்தை ஆராய்ந்து வருவதாக குறிப்பிட்டது.

எனினும், குறித்த அறிவிப்புக்குப் பின்னர் இராஜதந்திர ரீதியில் இந்தியா உள்ளிட்ட தரப்புக்களினால் உத்தியோகப்பற்றற்ற அதிருப்திகள் அரசாங்கத்துக்கு வெளியிடப்பட்டன.

விசேடமாக இலங்கைக்கு இரு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ள விருந்த இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் இறுதி நேரத்தில் அதனை இரத்து செய்திருந்தார்.

இந்த சீனக் கப்பலுக்கான அனுமதியை இலங்கை வழங்கினால் இராஜதந்திர ரீதியில் பதற்றமான நிலைமைகள் உருவாகும் என எதிர்க்கட்சி உறுப்பினர் நிரோஷன் பெரேரா உட்பட இந்திய ஆய்வாளர்கள் கருத்துக்களை வெளியிட்டனர்.

இந்நிலையில், சீனக் கப்பலுக்கான அனுமதி வழங்குவது தொடர்பில் ஆராய்ந்து வருவதாகவும் அதுகுறித்து இன்னமும் தீர்மானம் அறிவிக்கப்படவில்லை என்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மீண்டும் அறிவித்தார்.

இவ்வாறான தருணத்தில் பாதுகாப்பு அமைச்சு, கடற்றொழில் நீரியல் வளத்துறையுடன் இணைந்து சீனாவின் ஷியான்-6 கப்பல் ஆய்வுகளை மேற்கொள்வதற்கான அனுமதியைக் கோரியிருந்த நிலையில், அது தொடர்பிலான பரிந்துரைகள் தயாரிக்கப்பட்டு வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

தற்போது சீனாவின் ஷியான் - 6 கப்பலானது தென்சீனக் கடலிலிருந்து இந்து சமுத்திர பிராந்தியத்தினை அண்மித்ததாக, மலேஷியாவை அண்மித்து பயணித்துக்கொண்டிருக் கின்றது.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சீன விஜயம் நிறைவடையும் வரையில் குறித்த கப்பலின் இலங்கை விஜயத்தை தாமதப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் உள்ள நிலையில், அதுகுறித்து இலங்கையில் உள்ள சீன தூதரகமோ அல்லது சீன வெளிவிவகார அமைச்சோ இதுவரையில் எவ்விதமான பதிலளிப்புகளையும் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# பொலிஸாரின் துரித செயலால் ஏற்படவிருந்த அனர்த்தம் தவிர்ப்பு

வடமராட்சி, செப். 18

விஷமிகள் படகுக்கு வைத்த தீ பொலிஸாரின் துரித செயல்பாட்டால் பிற படகுகளுக்கு பரவாமல் காப்பாற்றப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு வடமராட்சி - பருத்தித்துறை முனைப்பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவம் குறித்து அறிய வருவதாவது,

"பாவனையற்றிருந்த பல நாள் படகுக்கு இனந்தெரியாதவர்கள் தீ வைத்துள்ளனர். தீ பரவல் ஏற்பட்டுள்ளது. இந்த நேரம், வீதியில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்ட பருத்தித்துறை பொலிஸார் இந்த விடயம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரியந்த அமரசுங்கவின் கவனத்துக்கு கொண்டு வந்தனர். இதையடுத்து யாழ். மாநகர சபையின் தீயணைப்பு வாகனம் அழைக்கப்பட்டு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

பொலிஸாரின் துரித செயல்பாட்டின் மூலம் முனை பிரதேசத்தில் பல படகுகள் தீப்பற்றாமல் காப்பாற்றப்பட்டது. (ஐ-02)

# ‘அறகலய’ போராட்ட காலத்தின்போது 13 பிளஸைக்கூட வழங்கியிருக்கலாம்!

## சந்திரிகா சொல்கிறார்



கொழும்பு, செப். 18

‘அறகலய’ போராட்ட காலத்தில் 13ஆவது திருத்தத்துக்கும் அப்பால் சென்று 13 பிளஸைக்கூட வழங்கியிருக்கலாம் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கூறியுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தப் பிரச்னை தொடர்பில் நான் பேச வேண்டும். எனது வாழ்வில் இந்தப் பிரச்னைக்காக பெரியளவில் அர்ப்பணித்துள்ளேன். இந்த விடயம் தொடர்பில் என்னைக் கொலைசெய்தும் இருப்பார்கள்.

அரசமைப்பின் சட்டமாகக் காணப்படும் 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறே தற்போது ஜனநாயக முறையில் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட தமிழ் தலைவர்கள் கோருகிறார்கள். இருப்பினும் இதனை சிலர் ஒருபுறம் தள்ளி வைத்துள்ளனர். அதனை ஏன் செயற்படுத்தமுடியாது 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமானால் சில விடயங்கள் உள்ளன. அதனை நடைமுறைப்படுத்த விரும்புவதாக ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார் அதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அவர் என்னிடமும் கேட்டுக்கொண்டார்.

அதற்கு எந்தவோர் ஒத்துழைப்பையும் வழங்குவதற்கு நான் தயார். ஆனால், அதற்கு வடக்கு - கிழக்கில் மாகாண சபைகள் இருக்கவேண்டும். அது அவசியம் ஜனாதிபதியாக நான் பொறுப்பேற்ற காலத்தில் புதிய அரசமைப்பைக் கொண்டுவர நடவடிக்கை எடுத்தேன். இனப்பிரச் சினைக்காக முன்வைக்கப்பட்ட முக்கிய மான தீர்வாக அது இருந்தது. உலகம் அதை ஏற்றுக்கொண்டது.

ஆனால் அதை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்னிடம் இல்லை. ஏழு வாக்குகளே இதற்கு போதாமல் இருந்தது. அந்த ஆதரவை அன்று ஐக்கிய தேசியக் கட்சி தரவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியுடன் 5 மாதங்கள் கலந்துரையாடிக் கொண்டு வந்த அரசமைப்பு வரைவை ஐக்கிய தேசியக் கட்சி விதண்டாவாதமாக எதிர்த்தது. அது மாத்திரமல்ல எனக்கு எதிராகக் கூச்சலிட்டு, அதனைத் தீயிட்டுக் கொளுத்தினர். தற்போதாவது அதனை நிறைவேற்றவேண்டும் என அவர் கூறுகிறார்.

அது மிகப்பெரிய விடயமல்லவா? ‘அறகலய’ போராட்டக் காலத்தில் 13இற்கும் அப்பால் சென்றும் தீர்மானங்களை எடுத்திருக்கலாம். நானாக இருந்திருந்தால் அதைச் செய்திருப்பேன். தற்போது 13ஐ நடைமுறைப்படுத்தவேண்டிய உண்மையான தேவை ரணில் விக்கிரமசிங்கவுக்கு உள்ளது. இது தொடர்பில் சிறந்த புரிந்துணர்வும் அவருக்கு உள்ளது - என்றும் கூறினார். (ஐ)

# நீதிவான் மீது லேசர் ஒளி பாய்ச்சிய தனியார் ஆசிரியருக்கு விளக்கமறியல்!

கொழும்பு, செப். 18

நீதிமன்ற அமர்வின்போது கடுவலை நீதிவான் மீது லேசர் ஒளி பாய்ச்சிய குற்றச்சாட்டின் பேரில், தனியார் வகுப்பு ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 27 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்

நீதிமன்ற பதிவாளர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேகநபரான ஜனித் டயஸ் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸார் சந்தேக நபரை பரிசோதித்தபோது அவரிடமிருந்து லேசர் கருவியொன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது, அவரின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர், சந்தேக நபர் மனநலம் குன்றியவர் என அவரின் பெற்றோர் தெரிவித்தனர் என்றும் அதுபற்றிய மருத்துவ அறிக்கைகளை நீதிமன்றில் சமர்ப்பிக்க முடியுமெனவும் தெரிவித்துள்ளார்.

சந்தேக நபரை எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், சந்தேகநபரின் மனநிலை குறித்து மனநல வைத்தியசாலையிலிருந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டார். (ஐ)

# போதைக்கு அடிமையான 10 பேர் மறுவாழ்வு சிகிச்சைக்கு சேர்வு!

யாழ்ப்பாணம், செப். 18

போதைப்பொருள் பாவனையிலிருந்து விடுபடுவதற்கு தாமாக முன்வந்த யாழ். இளைஞர்கள் 10 பேர் மறுவாழ்வுக்காக தேசிய அபாயகர ஔடதங்கள் அதிகார சபையின் நிட்டம்புவை சிகிச்சை மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற விசேட கூட்டத்தில் இந்த விடயம் வெளிப்பட்டது.

இதன்போது 21 முதல் 32 வயதுக்குட்பட்ட இளைஞர்களே மறுவாழ்வு சிகிச்சைக்காக தாமாக முன்வந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# 2ஆயிரம் அரச வாகனங்கள் முறைகேடாக பயன்பாட்டில்!

கொழும்பு, செப். 18

அரசியல்வாதிகள், பொலிஸ் அதிகாரிகள், பல்வேறு அரசாங்க நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் தலைவர்களுக்கு வழங்கப்பட்ட 2 ஆயிரம் உத்தியோகபூர்வ வாகனங்கள் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் தனிப்பட்ட தேவைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன என்று புலனாய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பெருமளவில் பணம் வீண் விரயமாகின்றமையும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை சிலர் தங்கள் தனியார் வாகனங்களை தாம் பணிபுரியும் நிறுவனத்துக்கு வாடகைக்கு வழங்கி அவற்றையும் தங்களது உத்தியோகபூர்வ வாகனங்களாக பயன்படுத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனங்களை தங்களது மனைவிகள் மற்றும் பிள்ளைகளின் தனிப்பட்ட பயணங்களுக்கும் குடும்ப உறுப்பினர்களின் ஏனைய பயணங்களுக்கும் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன என்று புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

படையினரின் சாரதிகள் குடும்ப உறுப்பினர்களின் பயணங்களுக்கு அரசாங்கத்தால் பிரதானிகளுக்கு வழங்கப்படும் எரிபொருளை பயன்படுத்துவதாலும் இந்த பண இழப்பு இரட்டிப்பு மூன்று மடங்காக அதிகரிப்பதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# இயற்கை நேயமிக்க பாடசாலை சூழலே கற்றலுக்கு தூண்டும்!

## சிறீதரன் எம்.பி.

கிளிநொச்சி, செப். 18

இயற்கை நேயமிக்க பாடசாலை சூழலே மாணவர்களுக்கு உளவியல் ரீதியாக புத்தெழுச்சியூட்டி, அவர்களிடையே கல்வி மற்றும் இணைபாடவிதான செயல்பாடுகளில் உள்ளார்ந்த விருப்போடு ஈடுபடுவதற்கான தூண்டலை ஏற்படுத்தும். பிள்ளைகளின் அடிப்படை எதிர்பார்ப்புகளுக்கேற்பவே பாடசாலைகளின் அகப்புறச் சூழல் கட்டமைக்கப்படவேண்டும். அதுவே மகிழ்வான கற்றல், கற்பித்தல் செயல்பாடுகளுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பேராலை சி. சி. த. க. பாடசாலையின் சிறுவர் விளையாட்டு முற்றத் திறப்பு விழா நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சிறீதரன் எம்.பி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தின் பச்சிலைப்பள்ளிக் கோட்டத்தில் வெறுமனே 32 மாணவர்களோடு இயங்கும் ஆரம்பப் பாடசாலையான இந்தப் பாடசாலை, தனது கட்டமைப்பு ரீதியாகக் கொண்டிருக்கின்ற கம்பீரத் தோற்றம், வனப்புமிகு பௌதிகச் சூழல் அதன் கவின்நிலை, கல்வித் தராதரம் என்பவை மாணவர்களுக்கு மகிழ்வளிக்கக்கூடிய கற்றல் சூழலை ஏற்படுத்தியுள்ளதை என்னால் அவதானிக்க முடிகிறது. ஒரு பாடசாலையின் வளர்ச்சிக்கு மாணவர் எண்ணிக்கையோ, அதன் அமைவிடப் பிரதேசமோ தடையாகாது என்பதற்கு இப்பாடசாலையை நான் முன்னுதாரணமாகக் கருதுகிறேன்.

பாடசாலைகளின் பௌதிக சூழல் கட்டமைப்பு, கல்வி அடைவுமட்டம் என்பவற்றின் விளிம்பு நிலைக்கு மாணவர்களது எண்ணிக்கைக் குறைவைக் காரணம் காட்டும் பல பாடசாலைகளின் நிர்வாகங்களும், திணைக்கள மட்டங்களும் இந்தப் பாடசாலையைத் தமக்கான வழிகாட்டியாகக் கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

# வீட்டின் உரிமையாளரை கொன்ற காவலாளி கைது!

கொழும்பு, செப். 18

கட்டுகஸ்தோட்டை, மெனிக்கும்புர பிரதேசத்திலுள்ள மூன்று மாடி வீடொன்றில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த காவலாளி வீட்டின் உரிமையாளரை கொலை செய்துள்ளார்.

நேற்று முன்தினம் கூரிய ஆயுதத்தால் தாக்கி அவரை படுகொலை செய்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தை சேர்ந்த 56 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார். அவரின் மனைவி வெளிநாட்டில் பணிபுரிந்து வருவதாகவும் குறித்த நபர் இந்த வீட்டில் தனியாக வசித்து வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வீடு புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருவதனால் வீட்டை பார்வையிடுவதற்கு குறித்த நபர் அடிக்கடி அங்கு வருவதாகவும் அந்த வீட்டின் பாதுகாப்பிற்காக காவலாளியாக சந்தேக நபர் நியமிக்கப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தக் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் கொலைக்கு பயன்படுத்திய கூரிய ஆயுதத்துடன் ஆற்றில் குதிக்க முற்பட்டுள்ளார். இதன் போதே கைது செய்யப்பட்டாரென பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ஐ)

# பெண்ணின் சடலம் மீட்பு!

கண்டி, செப். 18

கண்டி - மத்துரட்ட - ஹேவாஹெட்ட பிரதேசத்தில் 70 வயதுடைய பெண் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட் டுள்ளதாக மதுரட்ட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலத்தின் உடலிலிருந்து தலை வெட்டப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அதே பகுதியைச் சேர்ந்த 70 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்தாரென பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண் கடந்த 6ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்தார் என்று அவரது மகன் ஹகுராங்கெத்த பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார். (ஐ)

# நாவற்குழியில் விபத்து நான்கு பேர் காயம்!

யாழ்ப்பாணம், செப். 18

நாவற்குழியில் நேற்று பகல் இடம்பெற்ற விபத்தில் 2 குழந்தைகள் உட்பட நால்வர் காயமடைந்துள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் 1.30 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி நோக்கி பயணித்த ஓட்டோ கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது, ஓட்டோவில் பயணித்த சாரதி, 2 குழந்தைகள் மற்றும் குழந்தைகளின் தாயாரும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்கள் கிளிநொச்சி - பூநகரி - 4ஆம் கட்டை பகுதியை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிக காற்றால் ஓட்டோ சாரதியின் கட்டுப்பாட்டை இழந்ததாகக் கூறப்படுகின்றது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# இலங்கையின் சுகாதாரத்துறை குறித்த குற்றச்சாட்டுக்கள் நகைப்புக்குரியவை

## சுகாதார அமைச்சர் கெஹலிய கூறுகிறார்



கொழும்பு, செப். 18

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை உட்பட இதர சர்வதேச ஸ்தாபனங்களிடத்தில் இலங்கையின் சுகாதாரத் துறையை மையப்படுத்தி புனையப்பட்ட பொய்களை மையப்படுத்தி சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் நகைப்புக்குரியவை என்று சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

பொதுமக்களின் அடிப்படைகளுடன் பின்னிப்பிணைந்துள்ள சுகாதாரத்துறை, உணர்வு ரீதியான விடயம் என்பதால் அதனை பயன்படுத்தி இலகுவாக அரசியல் நன்மைகளை அடைவதற்கு பலதரப்பினரும் தீவிரமான முயற்சிகளை எடுத்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் சுகாதாரத்துறையானது நலிவடைந்துள்ள தோடு, பொதுமக்களுக்கான உரிய சேவையை முன்வைக்க முடியாத அளவுக்கு வீழ்ச்சி அடைந்துள்ளதாகவும், சுகாதார அமைச்சும் கட்டமைப்பும் ஊழல்கள் நிறைந்தவையாக உள்ளதாகவும் சுட்டிக்காட்டி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54ஆவது அமர்வில் பங்கேற்றிருந்த சுதந்திர மக்கள் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த யப்பா பண்டார உலக சுகாதார ஸ்தாபனத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் சந்தித்து தெளிவுபடுத்தியிருந்தார்.

இந்த நிலையில், குறித்த விடயம் சம்பந்தமாக பதிலளிக்கும்போதே அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் சுகாதாரத்துறையானது, மக்களுக்கு சேவைவழங்குவதாக உள்ளது. அதனால் சுகாதாரத்துறை தொடர்பான விடயங்கள் பொது மக்கள் மத்தியில் உணர்வு ரீதியாக இலகுவாக பிரசாரம் செய்யக்கூடியவையாக உள்ளன.

அதனடிப்படையில் வங்குரோத்து அடைந்துள்ள எதிர்க் கட்சிகளும், சில தொழிற்சங்கங்களும், பொய்யான பிரசாரங்களை முன்னெடுப்பதற்காக சுகாதாரத்துறையை கையிலெடுத்துள்ளன.

அவற்றின் பொய்யான பிரசாரத்தினால் எனக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டமையானது அதற்கு சிறந்த உதாரணமாக காணப்படுகின்றது.

இதேநேரம், நான் சுகாதாரத்துறையை பொறுப்பெடுக்கும்போது 570 மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு காணப்பட்டது. தற்போது அது 60 வரையில் குறைந்துள்ளது.

இவ்வாறான நிலைமைகள் பற்றியெல்லாம் தொழிற்சங்கங்களும், எதிர்க்கட்சிகளும் சிந்திப்பதில்லை. இலவச சுகாதாரத்துறையை சீர்குலைக்கும் வகையிலும், மக்கள் நாட்டத்தின் மீதான நம்பிக்கையை வலுவிழக்கச் செய்யும் வகையிலும் தான் செயற்படுகின்றன.

இந்நிலையில் தான் எதிரணியினர் ஐ.நாவுக்குச் சென்று முறைப்பாடுகளை முன்வைத்திருக்கின்றனர். நாட்டின் சுகாதாரத்துறை தொடர்பில் ஐ.நாவுக்குச் சென்ற செயல்பாடானது நகைப்புக்குரியதாகும்.

சர்வதேச நாடுகள் சுகாதாரத்துறையின் மேம்பாட்டிற்காக தொடர்ச்சியாக ஒத்துழைப்புக்களை வழங்கி வருவதால் அவற்றுக்கு யதார்த்தமான நிலைமைகள் நன்கு தெரியும் - என்றார். (ஐ)

# அழுகிய நிலையில் சடலம் புதுக்குடியிருப்பில் மீட்பு!

முல்லைத்தீவு, செப். 18

புதுக்குடியிருப்பு - கோம்பாவில்பகுதியில் அழுகிய நிலையில் ஆணொருவரின் சடலம் நேற்று முன்தினம்மீட்கப்பட்டது.

சடலமாக மீட்கப்பட்டவர் கடந்த புதன்கிழமை முதல் காணாமல் போயிருந்தார் என்று கூறப்படுகின்றது.

இந்நிலையில், தென்னங்காணி ஒன்றில் இருந்து துர்நாற்றம் வீசியதை அவதானித்தவர் அங்கு சென்று பார்த்தபோது, சடலத்தை கண்டு பொலிஸாருக்கு தெரிவித்தார்.

விசாரணையில் சடலமாக அடையாளம் காணப்பட்டவர் அதே இடத்தை சேர்ந்த இராசலிங்கம் சுதர்சன் என்பவராவார்.

சடலத்துக்கு அண்மையாக அவருடையது என்று கருதப்படும் சைக்கிள் ஒன்றும் செருப்புகளும் காணப்பட்டன.



சம்பவ இடத்துக்குச் சென்ற முல்லைத்தீவு நீதிமன்ற பதில் நீதிபதி எஸ்.கெங்காதரன் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி சுபுன் ஏக்கநாயக்க மற்றும் கிராம சேவையாளர் வே. மேகானந்த சிவம் ஆகியோர் சடலத்தை பார்வையிட்டனர்.

அத்துடன் தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் பரிசோதனைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டுள்ளார். பொலிஸார் விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

# மசாஜ் நிலையத்துக்கு சென்ற வெளிநாட்டு பெண் வன்புணர்வு

கொழும்பு, செப். 18

உனவட்டுன யத்தெஹிமுல்ல பிரதேசத்தில் சுற்றுலா பயணிகளுக்கு சேவைகளை வழங்கும் மசாஜ் நிலையமொன்றில் சேவைகளை பெற்றுக் கொள்ளச் சென்ற 38 வயதான அயர்லாந்து பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்தமை மற்றும் அதற்கு உதவியமை ஆகிய குற்றச்சாட்டுகளில் மசாஜ் மையத்தின் உரிமையாளரும் ஊழியர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று ஹபராதுவ பொலிஸார் தெரிவிக்கின்றனர். பெண்ணை வன்புணர்வு செய்ததற்காக ஊழியரும் அதற்கு உதவியமைக்காக உரிமையாளரும் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட பெண் நேற்றுமுன்தினம் குறித்த நிலையத்துக்கு மசாஜ் செய்வதற்காக சென்றபோதே இந்தக் குற்றம் இடம்பெற்றது. (ஐ)

# சி. ஐ. டியில் இணைக்கப்பட்ட பொலிஸ் அத்தியட்சகர் மாற்றம்!

கொழும்பு, செப். 18

சி.ஐ.டியுடன் இணைக்கப்பட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் (ஏ. எஸ். பி.) ஒருவரை பொலிஸ்மா அதிபர் உடனடியாக இடமாற்றம் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சி. ஐ. டி. தடுப்புக் காவலிலிருக்கும் 'ஹரக் கட்டா' என அழைக்கப்படும் நதுன் சிந்தக விக்கிரமரத்னவின் தப்பிக்கும் முயற்சிக்கு அவர் உதவியிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகத்துக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குற்றப் புலனாய்வுப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களை இரவு நேரம் சென்று பார்வையிட்ட குறிப்பிட்ட ஏ.எஸ்.பி., 'ஹரக் கட்டா' வழக்கு தொடர்பான விடயங்கள் பல சந்தர்ப்பங்களில் விவாதித்ததாக தெரியவந்தது.

மேலும், 'ஹரக் கட்டா' தொடர்பான வழக்கை தன்னிடம் ஒப்படைக்குமாறு சி.ஐ.டி. உயர் அதிகாரிகளிடம் இவர் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்த காரணங்களால் அவர் சி.ஐ.டியிலிருந்து மாற்றப்பட்டதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# யானை தாக்கியதில் இருவர் உயிரிழப்பு!

கொழும்பு, செப். 18

ஹந்துங்கமுவ மற்றும் மஹா ஓயா பிரதேசத்தில் காட்டு யானைகளின் தாக்குதலில் இருவர் உயிரிழந்தனர்.

மஹாஓயா, பொரபொல பிரதேசத்தில் காட்டு யானை தாக்கி 82 வயதுடைய ஒருவர் உயிரிழந்தார்.

யக்கினிகல பாதுகாப்பு பகுதியில் கல் அகழ்வு பணியை முடித்துவிட்டு திரும்பிக் கொண்டிருந்த நபர் யானை தாக்கி உயிரிழந்தாரென பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, இதே பகுதியில் காட்டு யானை தாக்கி 53 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்தார்.

அருகில் உள்ள வீட்டுக்குச் செல்வதாக கூறி வீட்டை விட்டுச் சென்ற அவர் வீடு திரும்பாத நிலையில் பிரதேச வாசிகள் மற்றும் வனவிலங்கு திணைக்கள அலுவலக அதிகாரிகள் மேற்கொண்ட தேடுதலின்போது அவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. (ஐ)

# அமைச்சர் பந்துல இந்திய நிறுவனத்திடம் ஐந்து கோடி ரூபாய் இலஞ்சம் வாங்கினார்

## புகையிரத சேவையை பாதுகாக்கும் அமைப்பு சாடல்

கொழும்பு, செப். 18

போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன இந்திய நிறுவனத்திடம் 5 கோடி ரூபாய் இலஞ்சம் பெற்றார் என்பதற்கு தகுந்த ஆதாரங்கள் என்னிடம் உள்ளன.

இவரை போக்குவரத்து அமைச்சு பதவியில் இருந்து நீக்கி உரிய விசாரணைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தவுள்ளோம் என்று புகையிரத சேவையை பாதுகாக்கும் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் இந்திக தொடங்கொட தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன விடம் ஊடகத்துறை அமைச்சு உள்ள காரணத்தால் அவர் தனக்கு ஏற்றால்போல் ஊடகங்களை கட்டுப்படுத்த முயற்சிக்கிறார். அவருக்கு எதிராக நான் குறிப்பிட்ட விடயங்களுக்கு ஊடகங்கள் கவனம் செலுத்த கூடாது என அவர் ஊடகங்களுக்கு மறைமுகமாக அச்சுறுத்தல் விடுத்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

புகையிரத பாதை அபிவிருத்தி பணிகளில் ஈடுபடும் இந்திய நிறுவனம் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தனவுக்கு 5 கோடி ரூபா இலஞ்சம் வழங்கியதாக நான் முன்வைத்த குற்றச்சாட்டை தொடர்ந்து கலக்கமடைந்துள்ளார்.

அமைச்சர் பந்துல குணவர்த்தன எப்படிப்பட்டவர் என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். அவர் மீது பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கவில்லை. சாட்சியங்களுடன்தான் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தேன். எதிர்வரும் நாட்களில் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடளிப்பேன்.

தனது அரசியல் அந்தஸ்தை பயன்படுத்தி தனது குடும்ப உறுப்பினர்கள் எவருக்கும் தொழில்வாய்ப்புக்களை பெற்றுக்கொடுக்கவில்லை என அமைச்சர் பந்துல குணவர்த்தன குறிப்பிடுவது அடிப்படை யற்றது. இவரது மூத்த மகன் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி, ஊடகத்துறை அமைச்சின் தனிப்பட்ட செயலாளராக பதவி வகிக்கிறார். மகள் அமெரிக்காவில் உள்ள இலங்கைக்கான தூதரகத்தில் மூன்றாம் நிலை அதிகாரியாக உள்ளார். இவ்வாறு மருமகன், மைத்துனன் என அனைவருக்கும் அரசாங்கத்தில் உயர்மட்ட பதவிகளை பெற்றுக்கொடுத்துள்ளார்.

போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தனவை பதவி நீக்கி முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தவுள்ளோம்.

புகையிரத சேவையை தனியார் மயப்படுத்த இவர் அதிக அக்கறை கொண்டுள்ளார். மறுசீரமைப்பு திட்டங்கள் தொடர்பில் தொழிற்சங்கத்தினருடன் கலந்துரையாடவில்லை. புகையிரத திணைக்களத்தை அதிகார சபையாக மாற்றியமைப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன முன்னெடுக்கும் முறையற்ற செயல்பாடுகளை எதிர்வரும் நாட்களில் மக்களுக்கு பகிரங்கப்படுத்துவோம் - என்றார். (ஐ)

# பண்ணையாளர்களின் அறவழி போராட்டம் மூன்றாவது நாளாகவும் நேற்று தொடர்ந்தது

மட்டக்களப்பு, செப். 18

**மட்டக்களப்பு சித்தாண்டி பிரதேச கால்நடை பண்ணையாளர்களின் அறவழி போராட்டம் ஞாயிற்றுக்கிழமை 3ஆவது நாளாக சித்தாண்டியில் நேற்றும் தொடர்ந்தது.**

**பண்ணையாளர்களும் கால்நடைகளும் நீண்டகாலமாக எதிர்நோக்கிவரும் அநீதிக்கு எதிரான அறவழி போராட்டமாக இந்தத் தொடர் போராட்டம் இடம்பெறுகின்றது.**





மட்டக்களப்பு செங்கலடி மற்றும் கிரான் பிரதேச செயலாளர் பிரிவின் எல்லையில் உள்ள தங்களின் மேய்ச்சல் தரை பிரதேசமான மயிலத்தமடு, பெரியமாதவனைப் பரப்பில் தொடரும் சட்ட விரோத குடியேற்றம் தடுக்கப்பட்டு மேய்ச்சல் தரைகளை தங்களுக்கு மீட்டுத் தருமாறு கோரி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இந்த அறவழிப் போராட்டத்தை மயிலத்தமடு, பெரிய மாதவனை கால்நடை வளர்ப்போர் அமைப்பு மற்றும் மட்டக்களப்பு கமநல அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை காலை சித்தாண்டி பிரதான வீதியில் ஒன்று கூடியவர்கள் தங்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதான வீதி வழியாக கோஷங்களை எழுப்பியவாறும் பதாதைகளை தாங்கியவாறும் சித்தாண்டி முற்சந்தி பிள்ளையார் ஆலயத்தை வந்தடைந்தனர்.

அங்கு பிள்ளையாரை வணங்கி தங்களது அறவழிப் போராட்டம் வெற்றி பெற வேண்டும் என சிதறு தேங்காய் உடைத்து அறவழிப் போராட்டத்தை ஆரம்பித்தனர். தங்களுக்கு நீதி கிடைக்கும் வரை இவ் போராட்டமானது சுழற்சியான முறையில் தொடருமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை குறித்த பிரதேசத்தில் தொடர்ச்சியான முறையில் கால்நடைகள் பெரும்பான்மை சமூகத்தினரால் துப்பாக்கி சூடு நடத்தி கொல்லப்படுதல், இறைச்சிக்காக வெட்டப்படுதல், களவாடப்படுதல் என்பன அதிகரித்துள்ளன. இதனால், பண்ணையாளர்கள் பெரும் அச்சுறுத்தல்களையும் இழப்புகளையும் சந்தித்து வருகின்றனர்.

இந்தப் போராட்டத்தில் சித்தாண்டி பிரதேசத்தின் பொது அமைப்புகள், சிவில் அமைப்புகளின் பிரதிநிகள், கமக்கார அமைப்புகள், இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம், செல்வராஜா கஜேந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களாக ப. அரியநேத்திரன், ஞா. சிறிநேசன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் இரா. துரைரெட்ணம், முன்னாள் மாகாண சபை பிரதி தவிசாளர் பிரசன்னா இந்திர குமார், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளான சிவலோகநாதன், கு. வி.லவக்குமார் மற்றும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் பவானந்தனும் கலந்துகொண்டனர். (ஐ)

# திருக்கோவில் பிரதேச சபைக்கு நெல் சுத்திகரிப்பு இயந்திரம்!



திருக்கோவில், செப். 18

அம்பாறை - திருக்கோவில் பிரதேச சபைக்கு உலக வங்கி நிதியுதவியுடன் நெல் சுத்திகரிப்பு இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

திருக்கோவில் பிரதேச சபையின் செயலாளர் ஜெயந்தி வீரபத்திரன் தலைமையில் நெல் சுத்திகரிப்பு இயந்திரம் பிரதேச சபை வளாகத்தில் பரீட்சார்த்தமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

எல்.டீ.எஸ்.பி. நிகழ்ச்சி திட்டத்தின் ஊடாக உலக வங்கியின் நிதியுதவியுடன் நெல் சுத்திகரிப்பு இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கமல் நெத்மினி பணிப்பாளர் சுமித் கேரத் பிரதிப் பணிப்பாளர் பிரசன்ன விஜயவர்த்தன மற்றும் ஆலையடிவேம்பு நாவிதன்வெளி பிரதேச சபையின் செயலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# மகளை வன்புணர்ந்த சந்தேகத்தில் தந்தை கைது!

மட்டக்களப்பு, செப். 18

17 வயதான மகளை வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் தந்தை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு - கொக்குவில் பொலிஸ் பிரிவிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், 58 வயதான தந்தையே கைது செய்யப்பட்டுள்ளார். தனது கணவர் மகளை வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்று மனைவி அளித்த முறைப்பாட்டை அடுத்தே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

இதனிடையே சந்தேகநபரை எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்குவில் பொலிஸ் நிலைய பெண்கள் சிறுவர் பிரிவினர் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கிழக்கு தனியார் மருத்துவமனை பிரதிநிதிகளுடன் ஆளுநர் சந்திப்பு

திருகோணமலை, செப். 18

கிழக்கு மாகாண தனியார் மருத்துவமனைகளின் பிரதிநிதிகள் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு இடையிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் தனியார் வைத்தியசாலை அதிகாரிகள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

மேலும், மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஊடாக தனியார் வைத்தியசாலை பிரதிநிதிகளுக்கு மேலதிக உதவிகள் வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

# களுவாஞ்சிக்குடியில் 15 வயது சிறுமி மாயம்!

மட்டக்களப்பு, செப். 18

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிலுள்ள மகளூரில் வீட்டில் இருந்த 15 வயது சிறுமி கடந்த வெள்ளிக்கிழமை காணாமல் போயுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மகளூர் முதலாம் பிரிவு, நீலகிரி வீதியைச் சேர்ந்த 15 வயது சிறுமியே இவ்வாறு காணாமல் போயுள்ளார். வீட்டில் பெற்றோர் வறுமையில் கஷ்டப்படுகின்றனர் என்றும், அதனால் அவர்கள் பிள்ளைகளான தங்களை பராமரிக்க முடியாத நிலையில் இருப்பதாகவும், தன்னை பராமரிக்கக் கூடிய சிங்கள வீடொன்றுக்கு தான் செல்வதாக வெள்ளிக்கிழமை கடிதம் எழுதி வைத்து விட்டு, வீட்டை விட்டு வெளியேறி காணாமல் போயுள்ளார் என்று சிறுமியின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சிறுமி காணாமல் போன விடயம் தொடர்பில் பொலிஸார் விசாரித்தபோது தெரிய வருவதாவது:

சிறுமியின் தந்தையார் மேசன் தொழிலை செய்து வருவதாகவும், சிறுமியின் மூத்த சகோதரன் திருமணம் முடித்து தனித்து சென்றுள்ளார். சிறுமியும் அவரின் மற்றொரு சகோதரர் ஆகிய இருவருமே பெற்றோருடன் வாழ்ந்து வருவதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், சிறுமியின் பெற்றோர் வறுமையால் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர் என்று கூறப்படுகின்றது. இந்நிலையிலேயே சிறுமி காணாமல் போயுள்ளார்.

# குச்சவெளியில் தொடரும் மணல் அகழ்வு மூவின மக்களும் சேர்ந்து கவனவீர்ப்பு!



திருகோணமலை, செப். 18

நிலாவெளி - இக்பால் நகர் தொடக்கம் தென்னமரவடி வரை கடற்கரையோரமாக மணல் அகழும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து மணல் அகழ்வால் பாதிக்கப்படும் கிராமங்களில் வசிக்கும் மூவின மக்களும் இணைந்து குச்சவெளி பிரதேச செயலகம் முன்பாக நேற்று கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த மணல் அகழ்வு அனுமதியை உடனடியாக இரத்து செய்யுமாறு கோரி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

மணல் அகழ்வின் மூலம் இயற்கை வளம் பாதிப்பதோடு மட்டுமல்லாமல் மக்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிடுவதோடு வழங்கிய அனுமதிக்கு முரணாக மணல் அகழப்படுவதால் கடற்கரையை அண்டி இருக்கின்ற கிராமங்கள் கடலுக்குள் உள்வாங்கப்படுகின்ற அபாயமும் நிலவுவதாக மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

தனியார் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ள இந்த அனுமதி மூலம் மக்களில் வாழ்வாதாரத்தை சுரண்டி தனியார் இலாபம் சம்பாதிப்பதாகவும் எதிர்கால சந்ததிக்கான இயற்கை வளம் இல்லா தொழிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்து அது தொடர்பான வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறும், கருத்துகளை தெரிவித்தும் ஆயிரக்கணக்கான மக்கள் இந்த போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (ஐ)

# சீன பாதுகாப்பு அமைச்சர் பதவியிலிருந்து நீக்கம்?



பீஜிங், செப். 18

சீனாவின் மத்திய இராணுவ ஆணையத்தின் கூட்டத்தில் எந்த விளக்கமும் இன்றி பாதுகாப்புத் துறை அமைச்சர் லீ ஷாங்பு இடம் பெறாத மையை தொடர்ந்து அவர் பதவியிலிருந்து அகற றப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இது குறித்து பி. ரி. ஐ. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது,

சீன இராணுவத்தின் தலைமை பீடமான மத்திய இராணுவ ஆணையத்தின் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில், ஆணையத்தின் துணைத் தலைவர் ஹீ வெய்ங்டாங், அரசியல் விவகாரங்களை மேற்பார்வையிடும் அட்மிரல் மியாவோ ஹூவா, ஏவுகணை படைத் தலைவர் ஷாங் ஷெங்மின் ஆகிய ஆணைய உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

ஆனால், இந்தக் கூட்டத்தில் அவசியம் பங்கேற்க வேண்டிய பாதுகாப்பு துறை அமைச்சர் லீ ஷாங்ஃபு கலந்து கொள்ளவில்லை. அரசு தரப்பிலிருந்து இதற்கான எந்த விளக்கமும் அளிக்கவில்லை. மாவோ சேதுங்குக்கு பிறகு சீனாவின் மிக சக்திவாய்ந்த தலைவர் என்று அழைக்கப்படும் ஜனாதிபதி ஷி ஜின்பிங்குக்கு நெருக்கமானவரான லீ ஷாங்ஃபு, இது போன்ற முக்கிய நிகழ்ச்சியில் பங்கேற்காதது இது முதல்முறை அல்ல.

ஏற்கெனவே, கடந்த 7 மற்றும் 8ஆம் திகதிகளில் வியட்நாம் இராணுவ உயரதிகாரிகளுடன் நடைபெற்ற பேச்சிலும் லீ ஷாங்ஃபு கலந்து கொள்ளவில்லை. அவர் இந்த மாதத் தொடக்கத்திலிருந்தே எந்த பொது நிகழ்ச்சியிலும் பங்கேற்கவில்லை என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில், மத்திய இராணுவ ஆணைய கூட்டத்திலும் அவர் பங்கேற்காதது அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்று ஏற்கெனவே எழுந்த சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது. ஏற்கெனவே, இதே போலவே வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த கின் கொங் தொடர்ந்து சில வாரங்களாக பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்காமல் இருந்தார். அதற்கான விளக்கமும் அளிக்கப்படவில்லை.

அப்போதும், கின் கொங் பதவியிலிருந்து அகற்றப்பட்டு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளதாக ஊகத் தகவல்கள் வெளியாகின. அதனை உண்மையாக்கும் வகையில், கின் கொங்குக்கு பதிலாக கம்யூனிஸ்ட் கட்சியின் வெளிவிவகார ஆணையத்தின் இயக்குநராக இருந்த வாங் யீ மீண்டும் வெளியுறவுத் துறை அமைச்சராக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், பாதுகாப்பு துறை அமைச்சர் லீ ஷாங்ஃபும் வாரக் கணக்கில் பொது நிகழ்ச்சிகளிலிருந்து மர்மமான முறையில் மாயமானார். இது, தனக்கு போட்டியாக வரக்கூடும் என்று ஜனாதிபதி ஷி ஜின்பிங்கால் சந்தேகிக்கப்படும் சக்தி வாய்ந்த தலைவர்கள் களையெடுக்கப்படுகிறார்கள் என்று சிலர் எழுப்பும் சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது என்று பி. ரி. ஐ. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஐ)




# பயனர்களுக்கு தெரியாமல் தரவு; கூகுளுக்கு ரூ.31,000 கோடி அபராதம்!

கலிபோர்னியா, செப். 18

பயனர்களுக்கு தெரியாமல் இருப்பிடம் (லொக்கேஷன்) குறித்த விவரங்களை சேகரித்த விவகாரத்தில் கூகுள் நிறுவனத்துக்கு சுமார் 31 ஆயிரம் கோடி (இலங்கை) ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கலிபோர்னியாவின் சட்டமா அதிபர் தாக்கல் செய்த வழக்கில் இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு காரணங்களுக்காக கூகுள் நிறுவனம் பயனர்களின் இருப்பிடம் சார்ந்த விவரங்களை சேகரிப்பது வழக்கம். அதற்கு பயனர்கள் இருப்பிடம் அம்சத்தை ஒன் செய்திருக்க வேண்டும். இதன் மூலம் பல்வேறு சேவைகளை பயனர்கள் பெற முடியும். இருப்பினும் தனிப்பட்ட விருப்பம் உட்பட பல்வேறு காரணங்களுக்காக பயனர்கள் லொக்கேஷனை நிறுத்தி வைத்திருப்பார்கள். இவ்வாறு நிறுத்தப்பட்டால் விவரம் சேகரிக்கப்படாது என கூகுள் தெரிவித்துள்ளது.

இருப்பினும், பயனர்களின் இருப்பிட விவரம் சார்ந்த தரவுகளை கூகுள் சேகரித்ததாக சொல்லி அமெரிக்காவில் வழக்கு தொடரப்பட்டது. கூகுளின் இணைய சேவையை பயனர்கள் பயன்படுத்தும் போது அதன் மூலம் லொகேஷன் சார்ந்த தரவுகள் மாற்று வழியில் பயனர்களுக்கு தெரியாமல் சேகரிக்கப்பட்டதாக அதில் தெரிவிக்கப்பட்டது.

இது உறுதி செய்யப்பட்டமையால் கூகுளுக்கு 9. 3 கோடி டொலர்கள் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இந்த குற்றச்சாட்டை கூகுள் ஏற்றுக் கொள்ளவில்லை. மேம்படுத்தப்பட்ட புராடெக்ட் கொள்கை மூலம் இதற்கு தீர்வு கண்டுள்ளதாக சொல்லப்படுகிறது. இருப்பினும் இந்த அபராதத்தை செலுத்த கூகுள் ஒப்புக் கொண்டுள்ளது.

(ஐ)



ஒரே உறைக்குள் இரு நட்சத்திரங்களை காட்டும் ஒளிப்படம் இது. அண்ட்ரோமெடா விண்மீன் மண்டலத்துக்கு அடுத்த பெரிய பிளாஸ்மா ஆர்க்கின் இந்தப்படம் பெருமதிப்புக்குரிய வானியல் ஒளிப்பட விருதை வென்றுள்ளது.

# பிரேசில் விமான விபத்தில் 14 சுற்றுலாவிகள் உயிரிழப்பு




பிரேசிலியா, செப். 18

பிரேசில் நாட்டில் ஏற்பட்ட விமான விபத்தில் சுற்றுலா பயணிகள் 14 பேர் உயிரிழந்தனர்.

தென் அமெரிக்க நாடான பிரேசிலின் அமேசான் மாகாணம் மனஸ் பகுதியில் இருந்து சுற்றுலா பயணிகள் 14 பேருடன் சிறிய ரக விமானம் பார்சிலோஸ் நோக்கி புறப்பட்டது.

கனமழை பெய்துகொண்டிருந்த நிலையில் விமானம் பார்சிலோசில் தரையிறங்கியது. அப்போது, விமானம் திடீரென விமானியின் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது. இந்த கோர விபத்தில் விமானத்தில் இருந்த சுற்றுலா பயணிகள் 14 பேர் உயிரிழந்தனர். (ஐ)

# மஹ்சா அமினி இறந்து ஒரு வருடம் தந்தையை கைது செய்தது ஈரான்!

தெஹ்ரான், செப். 18

ஈரானில் ஹிஜாப்புக்கு எதிரான போராட்டத்துக்கு காரணமாக அமைந்த மஹ்சா அமினியின் தந்தை ஈரான் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மஹ்சா அமினி உயிரிழந்து ஒரு வருடமாகியுள்ள நிலையில் அவரது தந்தை ஈரானிய பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஹிஜாப் அணியவில்லை என்ற குற்றச்சாட்டின் கீழ் கடந்த வருடம் செப்டம்பர் 13ம் திகதி ஈரானின் ஒழுக்க பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட மஹ்சா அமினி மூன்று நாட்களின் பின்னர் 16ஆம் திகதி பொலிஸ்காவலில் உயிரிழந்தார்.

அவரது மரணம் ஈரான் முழுவதும் கடும் ஆர்ப்பாட்டங்களை தூண்டியது. இந்த சம்பவங்கள் இடம்பெற்று ஒருவருடம் பூர்த்தியாகின்ற நிலையில் மஹ்சா அமினியின் தந்தை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அமினியின் தந்தை அம்ஜாட் கைது செய்யபட்டுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

மகளின் மரணத்தின் பின்னர் தந்தையை பொலிஸார் அடிக்கடி விசாரணைக்கு அழைத்தனர் என ஈரான் பத்திரிகையாளர் மஜியார் பஹாரி சிஎன்என் னிற்கு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அவர் சிலமணிநேரம் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டார் என அவர்குறிப்பிட்டுள்ளார். ஈரானின் மேற்கு குர்திஸ் நகரில் உள்ள அமினியின் கல்லறைக்கு அவரது குடும்பத்தினர் வெள்ளிக்கிழமை அவரது குடும்பத்தினர் சென்றிருந்தனர். அவர் மரணமடைந்து ஒரு வருடத்தை குறிக்கும் விதத்தில் அவர்கள் அங்கு சென்றிருந்தனர்.

அவ்வேளை அந்த மயானத்திற்கு மேல் ஹெலிகொப்டர் வட்டமிட்டதாகவும் மயானத்தை சுற்றி பொலிஸார் காணப்பட்டனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

மறுநாள் அம்ஜட்டும் அவரது மகனும் சில மணிநேரம் தடுத்து வைக்கப்பட்டு - மயானத்தில் இடம்பெறும் நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு மக்களை ஊக்குவித்தால் தண்டிக்கப்படுவீர்கள் என எச்சரிக்கப்பட்டுள்ளனர். எனினும், ஈரானின் அதிகாரிகள் இந்த தகவலை மறுத்துள்ளனர்.

முன்னதாக அமினியின் உறவினர் ஒருவர் செவ்வாய்கிழமை கைது செய்யப்பட்டார் என தகவல்கள் வெளியாகியுள்ளன. அமினி கொல்லப்பட்டு ஒரு வருடத்தை குறிக்கும் விதத்தில் ஈரானில் சனிக்கிழமை ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

(ஐ)



# நீதித்துறைக்கு நான் அச்சுறுத்தல் என்று கூறுவது தவறான பிரசாரம்!



## சபாநாயகர் மகிந்த யாப்பா

கொழும்பு, செப். 18

சட்டவாக்கத்துறையின் தலைமை ஆசனத்தில் அமர்ந்து கொண்டு நீதித்துறை அச்சுறுத்தும் வகையில் நான் செயல்படுகிறேன் எனத் தொடர்ச்சியாக தவறான பிரசாரம் முன்னெடுக்கப்படுகிறது என்று தெரிவித்துள்ள சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன, நீதித்துறையின் அதிகாரம் சட்டவாக்கத்துறையிடம் உள்ள தோடு நாடு வங்குரோத்து அடைந்து விட்டதாக அறிவிக்கப்பட்ட நிலையில், அதனை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகளை பொறுப்புடன் முன்னெடுக்கவேண்டிய தேவை அந்தத் துறையிடத்திலேயே உள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

இதேநேரம், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினருடன் அண்மையில் நடைபெற்ற சந்திப்பின்போது, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு காணப்படுகின்ற சிறப்புரிமைகளால் அவர்கள் முன்னெடுக்கின்ற சில கருத்து வெளிப்பாடுகள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது. அந்த விடயத்தில் கவனத்தைக் கொள்கின்றபோதும். சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவது தொடர்பில் தீர்மானங்கள் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவிடத்தில், சட்டவாக்கத்துறை நீதித்துறையின் மீது தலையீடுகளைச் செய்து சுயாதீனத்தன்மையை கேள்விக்குட்படுத்துவதாக சட்டத்தரணிகளின் கூட்டிணைவு குற்றஞ்சாட்டி வருகின்றமை மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துடன் முன்னெடுக்கப்பட்ட பேச்சு தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துடனான சந்திப்பு

இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தினர் அண்மையில் அதன் தலைவர் தலைமையில் என்னுடன் சந்திப்பொன்றை நடத்தியிருந்தார்கள். அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு காணப்படுகின்ற சிறப்புரிமைகளின் பெயரால் நீதிமன்ற தீர்ப்புக்கள் மட்டும் நீதித்துறையினர் மீது மேற்கொள்ளுகின்ற விமர்சனங்கள் தொடர்பில் கவனதுக்குக் கொண்டு வந்தார்கள். அந்த விடயங்கள் தொடர்பில் கவனத்தில் கொள்வதோடு பாராளுமன்ற சிறப்புரிமைகள் பற்றிய தெரிவுக்குழுவின் கவனத்துக்கும் கொண்டு செல்வதாகக் குறிப்பிட்டிருந்தேன்.

அதேநேரம், 1948ஆம் ஆண்டின் பாராளுமன்ற சிறப்புரிமைகள் திருத்தச் சட்டத்தில் எவ்விதமான மாற்றங்களையும் செய்வது பற்றி எந்தவிதமான தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை. அவ்வாறான செயற்பாடு உடனடியாக சாத்தியமான நிலையிலும் இல்லை.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பிலான தீர்மானம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியதன் பின்னர் அது தொடர்பில் நீதிமன்றத்தால் விசாரணைக்கு உட்படுத்த முடியாது என்றே எனது அறிவிப்பை வெளியிட்டேன்.

அந்த அறிவிப்பானது பல தரப்பட்ட ஆய்வுகளுக்கு மத்தியில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையிலானது ஆகும். குறிப்பாக, அநுர பண்டாரநாயக்க சபாநாயகராக இருந்தபோது, நீதியரசர் சரத் என் சில்வாவுக்கு எதிராக விசாரணைகளை முன்னெடுப்பதற்கு தெரிவுக்குழுவொன்றை அமைப்பதற்கு முன்மொழியப்பட்டபோது அதற்கு அனுமதி வழங்கியுள்ளமை மிகச் சிறந்த முன்னுதாரணமாக உள்ளது.

இவ்வாறான நிலையில், நான் நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மையில் தலையீடுகளைச் செய்கின்றேன். அச்சுறுத்தல் விடுகின்றேன் என்ற தொடர்ச்சியான குற்றச்சாட்டுக்கள் தவறான பிரசாரங்கள்ளாகும். அந்தப் பிரசாரங்களை செய்யும் தரப்பினர் தம்மை நிலைநிறுத்திக் கொள்வதற்காக முன்னெடுக்கின்ற செயற்பாடாகவே பார்க்க வேண்டியுள்ளது.

மேலும், நாடு வங்குரோத்து நிலையை அடைந்து விட்டதாக அறிவிக்கப்பட்டுவிட்டது. வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்துவதில்லை என்ற அறிவிப்பு இன்னமும் நீடிக்கின்றது. இவ்வாறான நிலையில் நாட்டை பொருளாதார ரீதியில் மீட்டு எடுப்பதாக இருந்தால் அதற்குரிய நடவடிக்கைகளுக்கு பாராளுமன்றத்தில் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டிருக்க வேண்டும். ஆனால், அவ்விதமான செயல்பாடுகள் காணப்படவில்லை.

மாறாக, பொருளாதார மீட்சிக்காக முன்னெடுக்கின்ற நடவடிக்கைளை தடுக்கும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுப்பது பொருத்தமானது அல்ல. மேலும், நாட்டின் நிதி அதிகாரம் பாராளுமன்றத்திடத்தில் உள்ளது. நிதி சம்பந்தமான தீர்மானங்கள் எடுக்கப்படுகின்ற போது, அதில் பாராளுமன்றத்தின் வகிபாகம் பிரதான இடத்தினை வகிக்கிறது.

ஆகவே, நிதி தொடர்பான விடயங்களை முன்னெடுத்துச் செல்வதற்க பாராளுமன்றத்தின் அனுமதி அவசியமாகிறது. பராளுமன்றமே பொறுப்புக்கூற வேண்டியுள்ளது. ஆகவே, அமைச்சரவையினால் முன்வைக்கப்படுகின்ற, நிறைவேற்றுத்துறையால் முன்வைக்கப்படுகின்ற விடயங்களுக்கு பாராளுமன்ற அனுமதி வழங்கப்படுகின்றமை தான் சம்பிரதாயமாக உள்ளது. அதனையே நானும் பின்பற்றியுள்ளேன்.

எனவே, அவ்விடயத்தை தவறாக புரிந்து மக்களை தவறாக வழிநடத்தும் வகையில் பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதே எனது நிலைப்பாடும் - என்றார். (ஐ)

# சரத்துகள் திருத்தப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு சட்ட வர்த்தமானி வெளியானது

கொழும்பு, செப். 18

திருத்தப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. முன்னதாக, கடந்த மார்ச் 22 ஆம் திகதி பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

எனினும், இந்த சட்டமூலத்தில் அடங்கியுள்ள சில சரத்துக்கள் தொடர்பில் பல தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து அதனை திருத்தியமைக்க அரசாங்கம் தீர்மானித்தது. இதன்படி பெறப்பட்ட ஆலோசனைகள் மற்றும் கருத்துகளின் அடிப்படையில் சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவின் உத்தரவுக்கு அமைய புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# துப்பாக்கி சூட்டில் யானை காயம் ஒருநாள் செலவு 40ஆயிரம் ரூபாய்!



கொழும்பு, செப். 18

துப்பாக்கி சூட்டில் முன் இடது காலில் பலத்த காயங்களுக்குள்ளான யானை ஒன்றுக்கு சுமார் மூன்று மாதங்களாக சிகிச்சை வழங்கி வருவதாக வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தின் அநுராதபுரம் பிராந்தியத்துக்குப் பொறுப்பான கால்நடை மருத்துவர் சந்தன ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்காக, மருந்துகள் தவிர உணவுக்கு மட்டும் ஒரு நாளைக்கு 30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் ரூபாய் வரை செலவிடப்படுகிறது.

இதேவேளை, குறித்த யானை நேற்று முன்தினம் மாலை இரத்த பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டதுடன், அதன் பின்னர் யானைக்கு மயக்க மருந்து செலுத்தப்பட்டு காலில் ஏற்பட்ட காயங்களுக்கு மருந்து போடப்பட்டுள்ளது.

இதையடுத்து, யானையை ஸ்கான் மற்றும் எக்ஸ்ரே பரிசோதனைக்கு மருத்துவக் குழுவினர் அனுப்பி வைத்தனர்.

இதற்காக வனஜீவராசிகள் திணைக்களத்தின் சுகாதார பணிப்பாளர் தாரக பிரசாத் மற்றும் அநுராதபுரம் வனவிலங்கு வலயத்துக்குப் பொறுப்பான கால்நடை வைத்தியர் சந்தன ஜயசிங்க ஆகியோர் தலைமையிலான வைத்தியர்கள் மற்றும் அதிகாரிகள் குழு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. (ஐ)

# வான் விபத்தில் 6 பேர் படுகாயம்!

கொழும்பு, செப். 18

ஹாலி - எல பிரதேச செயலகத்துக்கு முன்பாக வான் ஒன்று வீதியை விட்டு விலகி சுவரில் மோதியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் காயமடைந்து பதுளை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

பண்டாரவளை பிரதேசத்தில் வசிப்பவர்களே படுகாயமடைந்தனர். இவர்கள் லுனுகலவில் உள்ள உறவினர் வீட்டுக்கு சென்றுவிட்டு பண்டாரவளைக்கு திரும்பிக்கொண்டிருந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் தந்தை, தாய் மற்றும் மூன்று மகள்கள் மற்றும் தந்தையின் சகோதரி ஆகியோர் காயமடைந்தனர். இவர்களின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாகவும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

# திறைசேரி உண்டியல்கள் புதனன்று ஏல விற்பனை!

கொழும்பு, செப். 18

ஒரு இலட்சத்து 70 ஆயிரம் மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் நாளை மறுதினம் ஏல விற்பனை ஊடாக வழங்கப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி, 91 நாட்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட 70 ஆயிரம் மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 182 நாட்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட 60 ஆயிரம் மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 364 நாட்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட 40 ஆயிரம் மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது. (ஐ)

# அதிக மகசூல் தரும் மாதுளை இரு வகை கண்டறியப்பட்டது

கொழும்பு, செப். 18

இலங்கையில் வெற்றிகரமாக பயிரிடக்கூடிய அதிக மகசூலை தரும் இரண்டு புதிய வகை மாதுளை வகைகளை விவசாய திணைக்களம் கண்டறிந்துள்ளது.

இரண்டு புதிய மாதுளை வகைகளும் இலங்கையில் பயிரிடுவதற்கு ஏற்றது எனவும் அவர்களின் முயற்சிகள் மிகவும் வெற்றியடைந்துள்ளதாகவும் ஆய்வுக் குழு தெரிவித்துள்ளது.

அதிக மகசூல் மற்றும் மிகவும் இனிப்புடன் கூடிய இந்த இரு ரகங்களும் அடுத்த சில மாதங்களில் இலங்கையில் அறிமுகம் செய்யப்படவுள்ளன.

இந்தியா மற்றும் பிற நாடுகளில் இருந்து பெருமளவிலான மாதுளை மற்றும் விதைகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்றன. இதனால், ஆண்டுதோறும் பெருமளவு அன்னிய செலாவணியை அரசு இழக்கிறது.

இதனைத் தவிர்க்கும் நோக்கில் விவசாயத் திணைக்களத்தினால் இரண்டு புதிய மாதுளை ரகங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. உலர் வலயங்களில் பயிரிடக்கூடிய இந்த இரண்டு புதிய இரகங்களும் தற்போது நுரைச்சோலை மற்றும் வீரவில விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகளில் பயிரிடப்பட்டு வெற்றியடைந்துள்ளன. (ஐ)

*சனல் - 4 காணொலி விசாரணை:*

# பாராளுமன்ற தெரிவுக் குழு இந்தவாரம் நியமிக்கப்படும்

கொழும்பு, செப். 18

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்டுள்ள ஆவணப்படம் தொடர்பாக ஆராய்வதற்கான விசேட பாராளுமன்ற தெரிவுக்குழுவை இந்த வாரம் நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

குற்றம் சுமத்தப்பட்ட பாதுகாப்பு பிரதானிகள் மற்றும் அதிகாரிகள் தனித்து செயல்படக்கூடாது என்ற உத்தரவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாதுகாப்பு சபை கூட்டத்தில் விடுத்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பாதுகாப்பு சபை கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. பிரதமர் தினேஷ் குணவர்த்தன மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க உட்பட பாதுகாப்பு பிரதானிகள் கலந்துகொண்டிருந்தனர்.

நாட்டின் தேசிய பாதுகாப்பு உட்பட ஏனைய பாதுகாப்புத்துறை சார்ந்த விடயங்கள் குறித்து பரந்துபட்ட கலந்துரையாடல்களும் மீளாய்வுகளும் இதன் போது முன்னெடுக்கப்பட்டன.

இதனை தொடர்ந்து 2019ஆம் ஆண்டில் இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட உயிர்த்த ஞாயிறு தொடர் தற்கொலை தாக்குதல்கள் குறித்து பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்டுள்ள ஆவணப்படத்தின் விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான சனல் 4இன் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்காக விசேட குழு நியமிக்க கடந்த வார பாதுகாப்பு சபை கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது.

மறுபுறம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்டுள்ள ஆவணப்படத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் குற்றச்சாட்டுக்கள் குறித்து ஆராய்வதற்கு பாராளுமன்ற தெரிவுக் குழு இவ்வாரம் நியமிக்கப்படவுள்ளது.

இந்த வாரத்துக்காக பாராளுமன்ற அமர்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ள நிலையில், உயிர்த்த ஞாயிறு தற்கொலை தாக்குதல்கள் மற்றும் சனல் 4 வெளிப்படுத்தல்கள் குறித்து விசேட விவாதங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

## திலீபன்...

கொண்டிருந்தது.

சர்தாபுர பகுதியில் பேரினவாதிகள் கற்களை நடுவீதியில் போட்டு வீதியை வழிமறித்திருந்தனர். அந்த பகுதியில் பொலிஸார், இராணுவ புலனாய்வுத் துறையினரும் நின்றிருந்தனர். எனினும், அவர்கள் தாக்குதலை தடுக்கவில்லை என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் குற்றஞ்சாட்டினர்.

முதலில் முகத்தை கறுப்புத்துணியால் மறைத்து கட்டியிருந்த நபர் ஒருவர் கல் ஒன்றை வீசி ஊர்தியை தாக்கினார். தொடர்ந்து வாகனம் முன்னேறிய நிலையில், வீதியின் குறுக்கே தடைகளை ஏற்படுத்தி காத்திருந்த பேரினவாதக் கூட்டம், வாகனத்தை சுற்றிவளைத்து, கொட்டன்களால் அடித்து தாக்கினர். வாகனத்தில் இருந்தவர்களையும் கண்மூடித்தனமாக தாக்கினர்.

இந்த கொலைவெறி தாக்குதலில் இருந்து தப்பித்து, ஊர்தியை திருப்பி அருகிலுள்ள தம்பலகாமம் பகுதிக்கு கொண்டு சென்றுள்ளனர். தொடர்ந்து பயணிக்க முடியாத நிலையில், அங்கேயே தங்கியுள்ளனர்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், சட்டத்தரணி என். காண்டீபன் ஆகியோரும் கடுமையாக தாக்கப்பட்டனர்.

இந்த ஊர்திப் பவனிக்கு நேற்று முன்தினமும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது. ஒரு குழுவினர் மட்டக்களப்பு - மொறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாமுக்கு அருகாமையில் நின்று சிங்க கொடிகளை ஏந்தியவாறு வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள். இதனைக் கடந்து சென்றபோது வாழைச்சேனை சந்திக்கு அண்மையில் நின்ற ஒரு குழுவினர் பதாதைகளை தாங்கியவாறு மாலை 6.30 மணியளவில் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள்.

அந்த இடத்தைக் கடந்து ஊர்தி பயணித்துக் கொண்டிருந்தபோது அதே குழுவினர் பட்டா ரக வாகனத்தில் ஏறி ஊர்தியை முந்திச் சென்று நாவலடியிலுள்ள பொலநறுவை-வாகரை - மட்டக்களப்பு சந்தியில் இறங்கி வீதிக்குக் குறுக்காக பதாதைகளை பிடித்தவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஈஸ்டர்...

முறையான விசாரணைகளை நடத்தியுள்ளன. அதனால், மீண்டும் அதுதொடர்பில் விசாரணைகளை நடத்த வேண்டிய அவசியமில்லை என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும்.

தாக்குதல்கள் இடம்பெற்ற பின்னர் இன்டர்போல், அவுஸ்ரேலியாவின் பெடரல் பொலிஸார், அமெரிக்காவின் எப்.பி.ஐ ஆகிய பொலிஸார் முறையான விசாரணைகளை நடத்தி அவை தொடர்பிலான தகவல்களை ஏற்கனவே, சட்டமா அதிபரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அவர்கள் வழங்கிய விசாரணை அறிக்கைகளின் பிரகாரம் பெரும்பாலானவர்களுக்கு எதிராக வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

2022ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பில் மீண்டும் விசாரணையொன்றை நடத்துமாறு அமெரிக்காவின் எவ். பி. ஐ பொலிஸ் திணைக்களத்துக்கு இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுத்த போது, இந்த தாக்குதல்கள் குறித்து உரிய விசாரணைகள் நடத்தப்பட்டு ஏற்கனவே அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால் மீண்டுமொரு விசாரணை அவசியமில்லையென அவர்கள் வலியுறுத்தியதாகவும் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்பு சனல் 4 தொலைக்காட்சி உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல்கள் தொடர்பில் வெளியிட்டிருந்த ஆவணப்படத்தால் இலங்கையில் பெரும் அதிர்வலைகள் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக இந்த ஆவணப் படத்தில் இராஜாங்க அமைச்சர் சிவநேச்துரை சந்திரகாந்தன், சி.ஐ.டியின் பணிப்பாளர் சுரேஸ் சாலே ஆகியோர் மீது நேரடி குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டதுடன், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ மீதும் மறைமுக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

இதனால் பாராளுமன்றம் முதல் நாட்டின் அனைத்து அரசியல் மேடைகளிலும் இந்த விவகாரம் பேசுபொருளானது. எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பு காரணமாக சனல் 4 ஆவணப்படம் தொடர்பில் விசாரணைகளை நடத்த மூவர் அடங்கிய விசேட குழுவொன்றை ஜனாதிபதி நியமித்துள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது. (ஐ)

## தமிழரின்...

வெளியிட்டார்.

“திருகோணமலையில் தியாகதீபம் திலீபன் அண்ணாவை நினைவேந்தி அவரது உருவப்படத்தை தாங்கி வந்த ஊர்திப் பவனி மீது சிங்கள அடிப்படைவாதக் குழுவால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை மாணவர் சமூகமான நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

திலீபன் அண்ணாவின் உருவப் படத்தை தாங்கி வந்த ஊர்தியானது தமிழர் தலைநகரிலேயே தாக்கப்பட்ட இந்தச் சம்பவமானது வட, கிழக்கு மாகாணங்களில் இன்னமும் தமிழ் மக்களுக்கு அவர்களது குறைந்தபட்ச நினைவுகூரும் உரிமை கூட மறுக்கப்பட்டு வருகின்றது என்பதற்கு சாட்சியமாகும்.

அகிம்சையைப் பற்றிப் போதித்து அகிம்சாவாதிகளுக்கும் சனநாயகவாதிகளுக்கும் முன்னுதாரணமாக விளங்கும் தியாக தீபம் திலீபன் அண்ணாவின் இந்த நினைவூர்தியை தாக்கும் சிங்கள அடிப்படைவாதக் கும்பல்களைப் பார்த்தாவது உலக சமூகமும் நம் மக்களும் நமது இந்த நிலை பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டுமென மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (ஐ)

## நீதிமன்றம்...

தெரிவித்தனர்.

துப்பாக்கி சூட்டுக்கு இலக்கான தந்தையும் மகளும் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நிலையில் 6 வயது மகள் சிகிச்சை பலனின்றி உயிரிழந் தார்.

துப்பாக்கி சூடு சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை களை கொழும்பு - மருதானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற னர். (ஐ)

## தனிமைப்படும்...

முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆய்வில் நாட்டில் வசிக்கும் 2 ஆயிரத்து 946 பேரும் வெளிநாடுகளுக்கு சென்ற 665 பேரும் பங்கேற்றனர்.

இதில், 58 வீதம் மற்றும் 42 வீதமானவர்கள் பெண்கள் எனவும் இவர்களில் பெரும்பாலானோர் 26 முதல் 35 வயதுக்கு இடைப்பட்டவர்கள்.

இதனிடையே, நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்ற ஆயிரத் துக்கும் மேற்பட்ட படித்தவர்கள் இளைஞர்கள் உணவகங்கள், எரிபொருள் நிரப்பு நிலையங்கள், பல்பொருள் அங்காடிகள் போன்ற வற்றில் பணிபுரிவதாக வெளிவிவக ார அமைச்சு கூறுகிறது.

மேலும், ஐந்தாயிரத்துக்கும் அதிகமானோர் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதாகவும், கொரோனா வைரஸ் தொற்றுக்குப் பின்னர் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், அவர்கள் தமது தொழிலுக்கு ஏற்ற வேலைகளை தேடிக்கொள்ள முடியாமல், இவ்வாறான நிலைமைகளை ஏற்படுத்தியுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும், பல மருத்துவ வல்லுநர்கள் வெளிநாடுகளில் மருத்துவத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர் என்று கூறப்படுகின்றது. (ஐ)

## கிளிநொச்சி...

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இந்த விசேட கூட்டத்தைத் தொடர்ந்து, அமைச்சரின் ஆலோசனைக்கு அமைய இரணைமடு பகுதிக்கு கண்காணிப்பு பயணத்தை மேற்கொண்ட அரச மற்றும் பொலிஸ் அதிகாரிகள் அடங்கிய குழுவினர், குறித்த பகுதியில் அண்மைய நாட்களில் மணல் அகழ்வு இடம்பெறவில்லை என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

இதேவேளை, மறுஅறிவித்தல் வரை மணல் அகழ்விற்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதை நிறுத்துமாறு அதிகாரிகளுக்கு இன்றைய கூட்டத்தில் அறிவுறுத்தியுள்ள கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, எதிர்வரும் செவ்வாய்க்கிழமையில் இருந்து அமுலுக்கு வரும் அனுமதி பெற்ற மணல் அகழ்வு மற்றும் மணல் ஏற்றும் செயல்பாடுகள் அனைத்தையும் தற்காலிகமாக நிறுத்துமாறும் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத மணல் அகழ்வை முழுமையாக நிறுத்துவதற்கான உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கிலேயே தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

## சனல் 4 காணொலி...

ஊடகம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் வெளியிட்டுள்ள காணொலி சர்ச்சைகளை ஏற்படுத்தி யுள்ள நிலையில் ஓய்வுபெற்ற உயர் நீதி மன்ற நீதியரசர் எஸ். ஐ. இமாம் தலை மையில் ஓய்வுபெற்ற விமானப்படை தளபதி ஜயலத் வீரக்கொடி மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி ஹர்ஷ சோசா ஆகியோர் தலைமையிலான மூவ ரங்கிய குழுவினர் நியமிக்கப்பட்டுள் ளனர்.

எனினும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் சம்பந்தமாக சனல்-4 வெளியிட்டுள்ள காணொலி உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாக சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ச்சியாக வலியு றுத்தி வருகின்றது.

இந்நிலையில், கருத்து வெளியிடும் போதே அந்தக் கட்சியின் முக்கியஸ்தரான லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் சம்பந்தமாக விசாரணைகளை முன்னெடுப்பதற்கு ஏற்கனவே பாராளுமன்ற தெரிவு க்குழு அமைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதற்கு அடுத்தபடியாக, ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன. இவற்றை விடவும், பொலிஸார், படையினர் உள்ளிட்டவர்களும் சில விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். ஆனால், இதுவரையில் உண்மைகள் முழுமையாக கண்டறியப்படவில்லை.

குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் அடையாளப்படுத்தப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு பொறுப்புக்கூறப்படவில்லை.

இவ்வாறான நிலையில் தற்போது மீண்டும் ஒரு தடவை விசாரணைகளை முன்னெடுப்பதற்காக ஜனாதிபதியால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமையை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

அந்த விசாரணைக்குழுவினை நாம் முழுமையாக நிராகரிக்கின்றோம். குறித்த குழுவானது காலத்தினை இழுத்தடிக்கச் செய்வதற்கான ஜனாதிபதியின் நோக்கத்தினையே நடைமுறைப்படுத்தும் என்றே கருதுகின்றோம். ஆகவே, இந்த விடயத்தில் சர்வதேச விசாரணையை முன்னெடுப்பதே பொருத்தமானதாகும்.

மேலும், விசாரணைக் குழுக்களை அமைப்பதற்கு முன்னதாக தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்ச்சைக்குள்ளாகியுள்ள அதிகாரிகளான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜெயவர்த்தன, அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் சுரேஷ் சாலே ஆகியோரை பதவி நீக்கம் செய்ய வேண்டும்.

அவ்வாறான செயற்பாடுகள் ஊடாகவே ஜனாதிபதியும், அரசாங்கமும் உண்மைகளை கண்டறிவதற்கான இதயசுத்தியுடன் செயற்பாடுகளை முன்னெடுக்கிறது என்ற நம்பிக்கையை ஏற்படுத்த முடியும் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# திலீபன் நினைவு ஊர்தி மீது தாக்குதல் தமிழ்நாட்டின் கௌதமன் கண்டனம்!



சென்னை, செப். 18

**“தியாக தீபம் திலீபனின் 36ஆவது ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு நடத்திய நினைவு ஊர்தி பயணத்தில் திலீபனின் திருவுருவம் தாங்கிய ஊர்தி மீதும் பாராளுமன்ற உறுப்பினர் சகோதரர் செல்வராஜா கஜேந்திரன்மீதும் காட்டுமிராண்டித்தனமான கொலைவெறி தாக்குதலில் ஈடுபட்ட சிங்கள காடையர்களுக்கு தமிழ்ப் பேரரசு கட்சியின் சார்பாக எனது கடும் கண்டனத்தை தெரிவித்து கொள்கிறேன்.”**

இவ்வாறு அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் வ. கௌதமன் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில், “

முதல் நாள் பொத்துவில் தொடங்கிய பயணம் இரண்டாம் நாள் மட்டக்களப்பில் நிறைவடைந்து மூன்றாம் நாளான இன்று (நேற்று) திருகோணமலையில்பயணித்துக் கொண்டிருந்தபோது 50இற்கும் மேற்பட்ட இராணுவ புலனாய்வாளர்கள் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த போதிலும், ஊர்தி கப்பல்துறை முகசந்திக்கு அருகில் வந்து கொண்டிருந்த நிலையில் முதலாவதாக கல் வீச்சும் அதனை தொடர்ந்து சந்தாபுர சந்தியில் தியாக தீபம் திலீபனின் ஊர்தியை தாக்கியும் அதனை தடுத்த பாராளுமன்ற உறுப்பினர் சகோதரர் செல்வராஜா கஜேந்திரன், சட்டத்தரணி நா. காண்டீபன் ஆகியோர் மீது சிங்களக் கொடி பொருத்திய தடிகளால் கொலை வெறி தாக்குதல் நடத்திய காணொலிகளை கண்டபோது நெஞ்சம் துடிதுடித்து மனம் தாங்க முடியாத துயரத்தை அடைந்தது.

புலனாய்வாளர்களும் சிங்கள காவலர்களும் சுற்றி சூழ்ந்து பார்த்துக் கொண்டிருந்த நிலையில் இத்தகைய காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை காடையர்கள் நடத்தி இருப்பதென்பது ராஜபக்ஷ என்கிற கொடூரமானவருக்கு எந்த விதத்திலும் தான் சளைத்தவர் அல்ல என உலகத் தமிழினத்துக்கு ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஒருமுறை சொல்லாமல் சொல்லி சவால் விட்டிருப்பதாகவே எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

திட்டமிட்ட இன அழிப்பு நடந்து 14 ஆண்டுகள் கடந்த பின்பும் இவ்வுலகம் எங்களுக்கு நீதி தராத நிலையில் ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கே இலங்கை தேசத்தில் இத்தகைய ஒரு நிலை என்றபோது எங்களது சாமானிய தமிழர்கள் அங்கு எப்படி வாழ முடியும் என்பதை இனியாவது ஐ. நா. போன்ற உலகின் பெருமன்றங்கள் சிந்தித்து இதற்கெல்லாம் ஒரே தீர்வு ‘தனித் தமிழீழம்’ ஒன்றுதான் என்று முடிவெடுக்க வேண்டுமென உரிமையோடு கேட்டுக் கொள்கிறேன்.

தொடர்ந்து எங்கள் மீது அதிகார அத்துமீறலை நிகழ்த்திக் கொண்டிருக்கும் சிங்கள காடையர்களுக்கு நாங் கள் சொல்லிக் கொள்கிற செய்தி ஒன்றே ஒன்றுதான்.

“ஒவ்வொரு வினைக்கும் எதிர்வினை உண்டு” - என்றுள்ளது. (ஐ)

## சுதந்திர கட்சியின் பொது செயலர் பதவிக்கு கட்சிக்குள் கடும்போட்டி!



கொழும்பு, செப். 18

சிறீ லங்கா சுதந்திர கட்சியின் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து தயாசிறி ஜயசேகர நீக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்தப் பதவியை கைப்பற்றுவதற்காக அந் தக் கட்சியில் இருக்கின்ற சிரேஷ்ட உறுப்பினர்கள் மத்தி யில் கடும் போட்டி நிலவுகின்றது என கட்சியின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருந்தும், தான் கட்சியை விட்டுப் போகப்போவதில்லை என்றும் பொதுச்செயலாளர் பதவியை மீண்டும் கைப்பற்றுவதற்காகத் தொடர்ந்து போராடப் போவதாகவும் தயாசிறி கூறியுள்ளார்.

ஆதரவாக கட்சிக்குள் ஓர் அணி கிளம்பியுள்ளது. அதற்கு திலங்க சுமதிபால தலைமை தாங்குகின்றார்.

பொதுச்செயலாளர் பதவியை மீண்டும் தயாசிறிக்குப் பெற்றுக்கொடுக்கும் வரை போராட்டம் ஓயாது என்று திலங்க சுமதிபால தலைமையிலான அணியினர் கூறியுள்ளனர். (ஐ)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் 21 வயது இளைஞர் உயிரிழந்தார்

அம்பாறை, செப். 18

திருக்கோவில் - சாகாமம் குடிநிலம் பிரதான வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் 21 வயது இளைஞன் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இவ்விபத்து தொடர்பாக தெரியவருதாவது,

திருக்கோவிலில் இருந்து சாகாமம் குடிநிலம் நோக்கி பயணித்த குறித்த மோட்டார் சைக்கிள், பலத்த காற்று காரணமாக வேக கட்டுப்பாட்டை இழந்து வயல் வெளியில் தூக்கி வீசப்பட்ட நிலையில், அதில் பயணித்த நபர் உயிரிழந்தார்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர் சாகாமம் குடிநிலம் கிராமத்தைச் சேர்ந்த 21 வயதுடைய தர்மராசா நிதர்சன் என அடையாளம் காணப்பட்டார். இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## வெலிகமையில் கடல் நீரின் நிறம் பழுப்பாக மாறியது!

கொழும்பு, செப். 18

வெலிகம நகரை சூழவுள்ள கடற்பரப்பில் கடல் அலைகளின் நிறம் பழுப்பு நிறமாக நேற்று மாறியதாக மக்கள் தெரிவித்தனர்.

இது குறித்து நாரா நிறுவனத்தின் சிரேஷ்ட விஞ்ஞானி உபுல் லியனகேவிடம் கேட்டபோது,

இந்த நாட்களில் மழை பெய்து வருவதால் நீரோட்டங்கள் மாறி, பாசிகள் அதிகரித்து, கடலின் நிறத்தில் மாற்றம் ஏற்பட்டிருக்க கூடும் என தெரிவித்தார்.

மேலும், நீர் மாதிரிகள் எடுக்கப்பட்டு, இது போன்ற நிலை உள்ளதா என்பதை கண்டறிய ஆய்வு மேற்கொண்டு வருவதாகவும், யாரும் தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டாம் என்றும் அவர் கூறினார். (ஐ)

## ஓய்வுபெற்ற மருத்துவர்கள் அடுத்த வாரம் முதல்சேவையில்!

கொழும்பு, செப். 18

ஒய்வு பெற்ற மருத்துவர்களை ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் இணைந்துகொள்ள எதிர்பார்த்துள்ள விசேட மருத்துவர்கள் அடுத்த வாரம் முதல் உள்வாங்கப்படவுள்ளனர்.

சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார துறையில் நிலவும் மருத்துவர்கள் மற்றும் விசேட மருத்துவர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக அவர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## மணல் ஏற்றிச் சென்ற இரு டிராக்டர்கள் சிக்கின

கிளிநொச்சி, செப். 18

கிளிநொச்சியில் அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற இரு உழவு இயந்திரங்களை இராணுவத்தினர் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாறு பகுதியில் மணல் அகழ்வு இடம்பெறுவதாக இராணுவத்தினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய நேற்று அவர்கள் நடத்திய சோதனையின் போது இரண்டு உழவு இயந்திரங்கள் பிடிபட்டன.

அதேவேளை, குறித்த உழவு இயந்திரங்களின் சாரதிகளும் கைது செய்யப்பட்டு தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.



இந்தச் சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## பொலிஸ் உத்தியோகத்தர் மீது தாக்குதல் நடத்தியவர் கைது!

யாழ்ப்பாணம், செப். 18

பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்து பொலிஸ் உத்தியோகத்தரை தாக்கிய குற்றச்சாட்டில் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணை ஒன்றுக்கு வருமாறு பொலிஸார் சந்தேக நபருக்கு அழைப்பு விடுத்துள்ளனர். அவர் பொலிஸ் நிலையம் செல்லாததால் , கடந்த வியாழக்கிழமை குறித்த நபரை கைது செய்வதற்கு பருத்தித்துறை பொலிஸார் அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் நபரின் வீட்டுக்கு சென்றுள்ளனர்.

இதன் போது அவர் பொலிஸாருடன் முரண்பட்டு பொலிஸாரை தாக்கியும் உள்ளார். இதனை அடுத்து அச்சுவேலி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து அச்சுவேலியில் இருந்து மேலதிக பொலிஸார் அங்கு விரைந்து பருத்தித்துறை பொலிஸார்மீது தாக்குதல் மேற்கொண்டவரை கைது செய்து . பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். .சம்பவம் தொடர்பில் அச்சுவேலி, பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்னர். (ஐ-02)

## 90 ஆயிரம் சுற்றுலாவிகள் இந்த மாதம் வருகைதந்தனர்!

கொழும்பு, செப். 18

இந்த மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 90 ஆயிரம் சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை யினால் வெளியிடப்பட்டுள்ள தரவுகளின்படி, ஜூலை மாதத்தில் 89 ஆயிரத்து 724 சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர். (ஐ)

## வீதியை கடந்த முதியவர் மோ. சைக்கிள் மோதி பலி!

யாழ்ப்பாணம், செப். 18

கொடிகாமம் - கச்சாய் வீதியில் ஒட்டங்கேணி பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார்.

சைக்கிளில் பயணித்த முதியவர் வீதியைக் கடக்க முயன்ற போது மோட்டார் சைக்கிள் மோதி உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஒட்டங்கேணி பகுதியைச் சேர்ந்த துரைசாமி தெய்வேந்திரநாதன் என்ற 70 வயதான முதியவரே உயிரிழந்தார்.

விபத்தில் படுகாயமடைந்த குறித்த முதியவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் கைது செய்யப் பட்டுள்ளதுடன் விபத்து தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

## மோசடி சம்பவங்களால் மாதாந்தம் 100 பஸ் நடத்துநர்கள் பணி நீக்கம்!

கொழும்பு, செப். 18

பல்வேறு மோசடி சம்பவங்கள் காரணமாக மாதாந்தம் சுமார் 100 பஸ் நடத்துநர்களை பணிநீக்கம் அல்லது பணி இடை நீக்கம் செய்ய நேரிடுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக பஸ் நடத்துநர்கள் 381 பேரை புதிதாக சேவையில் இணைத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவித்தார்.

சாரதிகள் 912 பேரையும் புதிதாக சேவையில் இணைத்துக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் கூறினார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### ஆசியக் கிண்ண கிரிக்கெட்

# 8ஆவது தடவையாக இந்தியா சம்பியன்!




கொழும்பு, செப். 18

ஆசியக் கிண்ணத்தை 8ஆவது முறையாக கைப்பற்றியது இந்திய அணி.

ஆசியக் கிண்ண இறுதிப் போட்டி நேற்று நடந்தது. கொழும்பில் நடந்த இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடி யது.

இந்திய அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் 50 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

அணியின் தொடக்க ஆட்டக் காரர்களாக பதும் நிசங்க மற்றும் குஷல் பெரேரா களமிறங்கினர். ஆரம்பமே இலங்கை அணிக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

குஷல் பெரேரா ஓட்டம் எதுவும் பெறாமல் பும்ரா வீசிய பந்தில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

அதன்பின், முகமது சிராஜ் வீசிய ஓவரில் பதும் நிசங்க (2 ஓட்டங்கள்), சதீரா சமரவிக்கிரம 0, சரித் அசலங்க 0 , தனஞ்சய டி சில்வா (4 ஓட்டங்கள்) எடுத்து ஆட்டமிழந்து வெளியேறினர். ஒரே ஓவரில் சிராஜ் 4 விக்கெட்களை வீழ்த்தி அசத்தினார். அதன்பின், களமிறங்கிய இலங்கை வீரர்கள் அனைவரும் சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து பெவிலியன் திரும்பினர்.

இறுதியில் இலங்கை அணி 15.2 ஓவர்களில் 50 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இந்தியா தரப்பில் சிறப்பாக பந்துவீசிய முகமது சிராஜ் 6 விக்கெட்களை கைப்பற்றி அசத்தினார். ஹார்திக் பாண்டியா 3 விக்கெட்களையும், பும்ரா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

51 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணி 6.1 ஓவர்களில் இலக்கை எட்டி ஆசியக் கோப்பையின் சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றது. இந்திய அணி 10 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இஷான் கிஷன் 23 ஓட்டங்களுடனும், ஷுப்மன் கில் 27 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

ஆசியக் கோப்பையில் இந்திய அணி 8ஆவது முறையாக சம்பியன் பட்டத்தை வெல்வது குறிப்பிடத் தக்கது. (ஐ)



## வார்த்தைப் போரில் பாபர் அஸாம் - அப்ரிடி

கொழும்பு, செப். 18

ஆசிய கிண்ணத்தில் இருந்து பாகிஸ்தான் அணி வெளியேறிய பிறகு பாபர் அஸம் மற்றும் ஷஹீன் ஷா அப்ரிடி இடையே வார்த்தைப் போர் ஏற்பட்டது என தகவல் வெளியாகியுள்ளது.

ஹரிஸ் ரவூப் மற்றும் நசீம் ஷா ஆகியோரின் காயங்களால் பாகிஸ்தான் அணி ஆசிய கோப்பை தொடரில் பின்னடைவை சந்தித்தது. இலங்கைக்கு எதிரான போட்டியில் தோல்வி கண்டு தொடரில் இருந்தே வெளியேறியது. இதனிடையே, தோல்விக்கு பிறகு பாகிஸ்தான் கப்டன் பாபர் அஸமும், ஷஹீன் ஷா அப்ரிடியும் வார்த்தைப் போரில் ஈடுபட்டுள்ளனர் என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. தோல்விக்கு பிறகு அணி வீரர்கள் மத்தியில் பேசிய பாபர் அஸம், மூத்த வீரர்களின் செயல்பாடு குறித்து கேள்வி எழுப்பியதாக கூறப்படுகிறது.

அப்போது ஷஹீன் ஷா அப்ரிடி குறுக்கிட்டு, ”பொதுவாக பேச வேண்டாம், நன்றாக விளையாடியவர்களை ஏன் விமர்சனம் செய்ய வேண்டும்” என்று பேசியதாக சொல்லப்படுகிறது.

அதற்குப் பதிலளித்த பாபர், ”யார் நன்றாகச் செய்தார்கள், யார் செய்யவில்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.” என்று தெரிவித்ததாகவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஐ)

# உலகக் கிண்ணத்தை நாம் தக்கவைப்போம்

### ஜோஸ் பட்லர்

லோர்ட்ஸ், செப். 18

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் சம்பியன் பட்டத்தை தக்கவைத்துக்கொள்ள முயற்சி செய் வோம் என இங்கிலாந்து அணியின் தலைவர் ஜோஸ் பட்லர் தெரிவித் துள்ளார்.

நியூசிலாந்துக்கு எதிரான கடைசி மற்றும் 4ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 100 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இங்கி லாந்து அணி ஒருநாள் போட்டித் தொடரை 3-1 என கைப்பற்றி கிண்ணத்தைவென்றது.

லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற கடைசி ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 311 ஓட்டங்கள் குவித்தது.

டேவிட் மலன் 127, ஜோஸ் பட்லர் 36, ஜோ ரூட் 29, லியாம் லிவிங்ஸ்டன் 28 ஓட்டங்கள் சேர்த்தனர். 312 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 38.2 ஓவர்களில் 211 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. அதிக பட்சமாக ரச்சின் ரவீந்திரா 61, ஹென்றி நிக்கோல்ஸ் 41, கிளென் பிலிப்ஸ் 25 ஓட்டங்கள் சேர்த்தனர். இங்கிலாந்து அணி சார்பில் மொயின் அலி 4 விக்கெட்கள் வீழ்த் தினார்.

வெற்றிக்கு பின்னர் இங்கிலாந்து அணியின் தலைவர் ஜோஸ் பட்லர் கூறும்போது,




“எங்கள் பாணியிலான கிரிக்கெட்டை விளையாட விரும்புகிறோம். டேவிட் மலன் அற்புதமாக விளையாடினார். பந்து வீச்சாளர்களை அழுத்தத்தில் வைத்த படி ஆக்ரோஷமாக விளையாடி னார். மேலும் ஆட்டத்தின் சூழ் நிலையை நன்றாக அறிந்து செயல் பட்டார். பந்து வீச்சில் எங்களுக்கு சிறப்பான தொடக்கம் கிடைத்தது.

இதனால் விக்கெட்களை விரைவாக வீழ்த்தினோம். மொயின் அலி, லியாம் லிவிங்ஸ்ரைன் ஆகியோரால் என்ன செய்ய முடியும் என்பதை நாங்கள் அறிவோம். இது எங்க ளுக்கு ஆழமான வரிசையை வழங்குகிறது. உலகக்கோப்பையை தக்க வைத்துக்கொள்வதற்கு சிறந்த நிலை யில் உள்ளோம். அணி சிறப்பாக கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்தியா சென்று வெற்றி பெற முயற்சி செய்வோம். ஆனால் இதே நிலை யில்தான் மற்ற அணி வீரர்களும் இருப்பார்கள். இதனால் இம்முறை உலகக் கிண்ணத் தொடர் சுவாரசியமாக இருக்கும்” என்றார். (ஐ)




## ஹென்றிச் 174 ஓட்டங்கள் தென்னாபிரிக்கா வெற்றி!

செஞ்சூரியன், செப். 18

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான 4ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 164 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது தென்னாபிரிக்க அணி. அந்த அணியின் துடுப்பாட்ட வீரர் ஹென்றிச் கிளாசன் 83 பந்துகளில் 174 ஓட்டங்கள் விளாசி மிரள செய்தார்.

செஞ்சூரியன் நகரில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பாட்டம் செய்த தென்னாபிரிக்க அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 416 ஓட்டங்கள் குவித்தது.

ஹென்றிச் கிளாசன் 83 பந்துகளில் 13 சிக்ஸர்கள், 13 பௌண்ட்ரிகளுடன 174 ஓட்டங்கள் விளாசி அவுஸ்திரேலிய அணியின் பந்து வீச்சாளர்களை மிரளச்செய்தார். அவருக்கு உறுதுணையாக விளையாடிய டேவிட் மில்லர் 45 பந்துகளில் 5 சிக்ஸர், 6 பௌண்ட்ரிகளுடன் 82 ஓட்டங்கள் விளாசி ஆட்டமிழக்காமல் இருந்தார்.

முன்னதாக ரேஸா ஹெண்ட்ரிக்ஸ் 28 ஓட்டங்கள் குயின்ரன் டி கொக் 45, எய்டன் மார்க்ரம் 8, ராஸி வான் டெர் டஸ்ஸன் 62 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தனர். அவுஸ்திரேலிய அணி சார்பில் ஜோஷ் ஹசில்வூட் 2 விக்கெட்கள் கைப்பற்றினார்.

417 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 34.5 ஓவர்களில் 252 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. அதிக பட்சமாக அலெக்ஸ் கேரி 77 பந்துகளில், 4 சிக்ஸர், 9 பௌண்ட்ரிகளுடன் 99 ஓட்டங்கள் சேர்த்தார்.

டேவிட் வோர்ணர் 12, ட்ராவிஸ் ஹெட் 17, மிட்செல் மார்ஷ் 6, மோர்னஷ் லபுஷேன் 20, மார்கஸ் ஸ்ரொய்னிஸ் 18, டிம் டேவிட் 35, மைக்கல் நேசர் 3, நேதன் எலிஸ் 18, ஆடம் ஸம்பா 9 ஓட்டங்களில் நடையை கட்டினர். தென்னாபிரிக்க அணி சார்பில் லுங்கி நிகிடி 4, காகிசோ ரபாடா 3 விக்கெட்கள் வீழ்த்தினர்.

164 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டி தொடரை 2-2 என சமநிலைக்கு கொண்டு வந்துள்ளது. (ஐ)

## இந்திய அணிக்கு எதிரான ஆஸி. அணி அறிவிப்பு!

சிட்னி, செப். 18

உலகக் கிண்ணத்துக்கு முன்னதாக இந்தியாவுடன் ஆஸி. அணி ஒருநாள் தொடரில் மோதுகிறது.

இதில் முக்கியமான வீரர்கள் அணிக்கு திரும்பியுள்ளார்கள். காயம் காரணமாக தென்னாபிரிக்க தொடரில் முக்கிய வீரர்கள் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

அணித் தலைவர் பட் கம்மின்ஸ், மக்ஸ்வெல், ஸ்மித் ஆகியோர் அணிக்கு திரும்பியுள்ளார்கள்.

அணி விவரம்:

பட் கம்மின்ஸ் (அணித் தலைவர்), சீன் அபொட், அலெக்ஸ் கைரி, நாதன் எல்லிஸ், கேமரூன் கிரீன், ஜோஸ் ஹசல்வுட், ஜோஸ் இங்கிலிஸ், மாட் ஷார்ட், ஸ்பென்செர் ஜான்ஸன், மார்னஸ் லபுஷேன், மிட்செல் மார்ஷ், க்ளென் மக்ஸ்வெல், தன்வீர் சங்கா, ஸ்டீவ் ஸ்மித், மிட்செல் ஸ்டார்க், மார்கஸ் ஸ்டாய்னிஸ், டேவிட் வோர்ணர், அடம் ஷம்பா

செப்.22ஆம் திகதி வரை உலகக் கிண்ண அணியில் மாற்றங்களை ஏற்படுத்தலாம் என ஐ. சி. சி. தெரிவித்துள்ளதால் ஆஸி. அணிக்கு இன்னும் நேரமிருக்கிறது. அதற்குள்ளாக டிராவிஸ் ஹெட் நிலைமை குறித்து அறிவிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிரது. மேலும் லபுஷான் இருக்கிறாரா என்பதும் தெரியவரும்.

எதிர்வரும் 22, 24, 27 ஆகிய திகதிகளில் ஒருநாள் தொடர் நடைபெறவுள்ளது.



# ஆசியான் விடுக்கும் செய்திகள்!

போதிய கவனம் பெறாமல் சர்வதேச நிகழ்வு ஒன்று கடந்து போயிருக்கிறது. இந்தியத் தலைநகர் டில்லியில் மிகப் பெரிய ஜி20 உச்சி மாநாடு தொடங்க இருந்த வேளையிலும்கூட, பிரதமர் நரேந்திர மோடி இந்தோனேசிய தலைநகர் ஜகார்த்தாவுக்கு விரைந்து 'ஆசியான்' உச்சி மாநாட்டில் கலந்து கொண்டதிலிருந்து அதன் முக்கியத்துவம் எத்தகையது என்பதை உணரலாம்.

1967-ஆம் ஆண்டு அமெரிக்க - சோவியத் யூனியன் பனிப்போர் உச்சகட்டத்தில் இருந்தபோது, இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பின்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய ஐந்து நாடுகளும் கம்யூனிஸத்துக்கு எதிரான பிராந்தியக் கூட்டணி ஒன்றை உருவாக்கின. இப்போது அரை நூற்றாண்டுக்குப் பிறகு அந்தக் கூட்டணி விரிவடைந்து மேலும் புருணே, கம்போடியா, லாவோஸ், மியான்மர், வியத்நாம் ஆகிய நாடுகளையும் உள்ளடக்கிய வலுவான சர்வதேச அமைப்பாக உயர்ந்திருக்கிறது.

உலகின் மிக முக்கியமான கடல் பாதையில் அமைந்திருக்கிறது 'ஆசியான்' நாடுகளை உள்ளடக்கிய பிராந்தியம். தென்சீனக் கடல், மலாக்கா ஜலசந்தி ஆகியவற்றை உள்ளடக்கிய ஆசியாவின் இந்தப் பகுதியிலுள்ள 10 நாடுகளும் சேர்ந்தால் உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதாரமாக இருக்கும். அவற்றின் ஒருங்கிணைந்த வருடாந்திர ஜிடிபி 2022-இல் சுமார் 3.2 டிரில்லியன் டாலர். ஏறத்தாழ 60 கோடி மக்கள்தொகை கொண்ட இந்தப் பகுதி, சர்வதேச பொருளாதாரத்தில் மிக முக்கியமான சந்தை.

செப்டம்பர் 5-ஆம் தேதி ஜகார்த்தாவில் கூடிய 43ஆவது 'ஆசியான்' கூட்டமைப்பின் உச்சி மாநாடு, பெரிய திருப்புமுனைத் தீர்மானங்களை நிறைவேற்றாவிட்டாலும், தங்களது பிராந்தியத்தில் சீனாவும் அமெரிக்காவும் போட்டி போடுவதை மறைமுகமாக விமர்சித்திருக்கிறது. நடந்து முடிந்த 'ஆசியான்' உச்சி மாநாட்டின் குறிப்பிடத்தக்க சில அம்சங்கள் சர்வதேசப் பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தன.

21-ஆவது நூற்றாண்டை ஆசியாவின் நூற்றாண்டு என்று குறிப்பிட்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பேசியதன் பின்னணியில் சில உண்மைகள் இருக்கின்றன. அதே நேரத்தில் அதை முழுமையாக ஏற்றுக்கொள்ளவும் முடியாது. உலகின் மிகவும் துடிப்பான பொருளாதார பிராந்தியமாக இருந்தாலும்கூட, 'ஆசியாவின்



நூற்றாண்டு' என்று பிரதமர் மோடி தெரிவித்திருக்கும் கருத்து, சாத்தியமாகும் என்று தோன்றவில்லை.

இன்றைய நிலையில் உலகின் முக்கியமான மூன்று பொருளாதாரங்கள் - ஜப்பான், சீன, இந்தியா - ஆசியாவைச் சார்ந்தவை என்பது உண்மை. உலகில் மிக அதிகமாக நடுத்தர வர்க்கத்தினர் வாழும் பகுதியும் ஆசியா என்பதையும் மறுக்க முடியாது.

ஆனால், ஆசியா என்பது இயற்கையான இனக்குழுவின் அமைப்பு அல்ல என்றும், ஐரோப்பிய புவியியலாளர்களின் உருவாக்கம் என்றும் ஒரு வாதம் முன்வைக்கப்படுகிறது. மத்திய ஆசிய குடியரசுகளுக்கும், கிழக்கு ஆசிய பொருளாதாரங்களுக்கும் எந்தவிதத் தொடர்பும் கிடையாது. நடுவில் இருக்கும் தெற்காசியா, அவை இரண்டிலிருந்தும் முற்றிலும் வேறுபட்ட இனச்சமூகம். அதனால், ஆசியாவின் தாக்கம் என்றோ, ஆசியாவின் பொருளாதாரம் என்றோ எதையும் குறிப்பிட முடியாது என்பது அவர்கள் வாதம்.

பிரதமர் மோடி தனது உரையில், 'விதிகள் அடிப்படையிலான உலக ஒழுங்கு முறை உருவாக்கப்பட வேண்டும்' என்று விடுத்த அறைகூவல், சீனாவுக்கு எதிரானது என்பது தெளிவு. ஆசியாவைப் பொறுத்தவரை, அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையில் கிழக்காசிய நாடுகள் பாதுகாப்பு ரீதியாகவும், வர்த்தக - பொருளாதார ரீதியாகவும் பல தர்மசங்கடங்களை எதிர்கொள்கின்றன.

நடந்து முடிந்த 'ஆசியான்' உச்சி மாநாட்டில் அமெரிக்கா தனது முக்கியத்துவத்தை உணர்த்தத் தவறிவிட்டது என்றுதான் கூற வேண்டும். அதிபர்

**சீனாவின் விமர்சனத்துக்குரிய புதிய வரைபடத்தால் 'ஆசியான்' அமைப்பிலுள்ள பல நாடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அது குறித்து எந்த உறுப்பு நாடும் எதுவும் பேசவில்லை என்பது சீனாவின் ராஜதந்திர வெற்றியின் அடையாளம்.**

பைடன் மாநாட்டில் கலந்துகொள்ளாமல் துணை அதிபர் கமலா ஹாரிஸை அமெரிக்காவைப் பிரதிநிதிப்படுத்த அனுப்பியது மிகப் பெரிய சறுக்கல். அந்த வாய்ப்பை சீனா தனக்குச் சாதகமாக மாற்றிக்கொண்டுவிட்டது.

துணை அதிபர் கமலா ஹாரிஸால் குறிப்பிடும்படியான எந்தவித அறிவிப்பையும் ஆசியான் நாடுகளுக்கு தெரிவிக்க முடியவில்லை. ஆனால், சீனாவின் சார்பில் கலந்துகொண்ட பிரதமர் லி கியாங் முக்கியமான அறிவிப்பின் மூலம் ஆசியா நாடுகளை சீனாவின் வலையில் வீழ்த்திவிட்டார்.

கடந்த 10 ஆண்டுகளில் சீனா 41,000 கி.மீ. அதிவிரைவு ரயில் பாதையை அமைத்திருக்கிறது. சீனாவின் உதவியுடன் இந்தோனேசியாவில் அடுத்த மாதம் ஜகார்த்தா - பாண்டுங் இடையே அதிவிரைவு ரயில் பாதை செயல்பட இருக்கிறது. ஏனைய 'ஆசியான்' நாடுகளிலும் அதுபோன்ற ரயில் பாதையை அமைக்க சீனா உதவத் தயார் என்கிற அறிவிப்பின் மூலம் தன் மீதான விமர்சனத்துக்கு வாய்ப்பூட்டு போட்டுவிட்டது சீனா.

சீனாவின் விமர்சனத்துக்குரிய புதிய வரைபடத்தால் 'ஆசியான்' அமைப்பிலுள்ள பல நாடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அது குறித்து எந்த உறுப்பு நாடும் எதுவும் பேசவில்லை என்பது சீனாவின் ராஜதந்திர வெற்றியின் அடையாளம். போதாக்குறைக்கு சீனாவுக்கும் 'ஆசியான்' அமைப்புக்கும் இடையே தடையில்லா வர்த்தக ஒப்பந்தத்தின் மேம்பாடு உள்ளிட்ட பல ஒப்பந்தங்கள் கையொப்பமாகியிருக்கின்றன.

'ஆசியான்' உச்ச மாநாடு இரண்டு செய்தியை தெரிவிக்கிறது. முதலாவது செய்தி, சீனாவின் அதிகரிக்கும் மேலாதிக்கம். இரண்டாவது செய்தி, தனது நேரடி பங்கெடுப்பின் மூலம் ஆசியானுக்கும், அமெரிக்கா தலைமை வகிக்கும் 'க்வாட்' அமைப்புக்கும் இடையேயான நல்லுறவுக்கு இந்தியா இணைப்புப் பாலமாக இருக்கும் என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

(தினமணி)

# நிறம் மாறும் கடல்கள்





**சிதம்பரம் இரவிச்சந்திரன்**

காலநிலை மாற்றத்தால் பூமியில் கடல்களின் நிறம் மாறிக் கொண்டிருக்கிறது என்று ஆய்வுகள் கூறுகின்றன. ஒரு கடல் பசுமை நிறமாக மாறக் காரணம், அதில் உள்ள தாவர மிதவை உயிரினங்களின் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படுவதே என்று நாசா நிறுவனத்தின் பகுப்பாய்வுப் படங்கள் கூறுகின்றன. ஆழ்ந்த நீல நிறத்தில் இருக்கும் ஒரு கடல் காலப்போக்கில் பச்சை நிறத்திற்கு மாறுகிறது. பூமத்திய ரேகைக்கு கீழுள்ள பகுதியில் அமைந்துள்ள கடற்பகுதிகளில் இந்த பாதிப்பு அதிகம் காணப்படுகிறது.

"கடல் நீர் நிறம் மாறுவது பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் சூழல் மண்டலத்தில் நிகழும் மாற்றங்களையே இது அடையாளப்படுத்துகிறது" என்று நேச்சர் ஆய்விதழில் வெளியிடப்பட்டுள்ள ஆய்வுக் கட்டுரையின் ஆசிரியர் மற்றும் சவுத்தாம்ப்டன் பல்கலைக்கழகத்தின் தேசிய கடல்சார் ஆய்வு மைய விஞ்ஞானி பிபி கேல் கூறுகிறார்.

காலநிலை மாற்றத்தின் தற்போதைய போக்கை அறிய கடல் நீரின் நிறம் பற்றி நடத்தப்பட்ட இந்த முன்னோடி ஆய்வில் மிதவை உயிரினங்களில் உள்ள பசுமையான க்ளோரோபில் அல்லது பச்சைய செல்கள் பற்றி முக்கியமாக ஆராயப்பட்டது. மிகச் சிறந்த தரவுகளின் களஞ்சியமான நாசாவின் மோடீஸ் நீரியல் செயற்கைக்கோளின் உதவியுடன் இந்த ஆய்வுகள் நடத்தப்பட்டன.

### நாசாவின் செயற்கைக்கோள்

இந்த செயற்கைக்கோள் டெரா மற்றும் அக்வா என்ற இரு விண்கலங்களில் செயல்படுகிறது. 2330 கிலோ மீட்டர் அகலத்தில் இது பூமியின் நிலம் மற்றும் நீர்ப் பரப்பு முழுவதையும் ஆராயும் திறன் பெற்றது. கடல் நீரில் ஏற்படும் சிவப்பு, நீலம் உள்ளிட்ட நிறங்களின் மாற்றங்களை இதில் உள்ள நிறமானி முழுமையாக ஆராய்ந்து கூறியுள்ளது. வெவ்வேறு அளவுள்ள மிதவை உயிரினங்கள் ஒளியை வெவ்வேறு அளவுகளில் சிதறடிக்கின்றன. வேறுபட்ட நிறமிகளைக் கொண்ட மிதவை உயிரினங்கள் ஒளியை வேறுபட்ட அளவில் உறிஞ்சுகின்றன.

நிறங்களில் ஏற்படும் மாற்றங்களை ஆராய்வதன் மூலம் உலகம் முழுவதும் கடல்களில் வாழும் தாவர மிதவை உயிரினங்களின் எண்ணிக்கையில் ஏற்படும் மாற்றங்களைப் பற்றி விஞ்ஞானிகளால் துல்லியமாக அறிய முடியும். ஒளிச்சேர்க்கை செய்யும் திறன் பெற்ற ஒற்றை செல்லுடன் கடலில் வாழும் உயிரினங்களே தாவர மிதவை உயிரினங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

கடற்சூழல் மண்டலத்தில் உணவுச்சங்கிலியின் அடிப்படை இந்த உயிரினங்களே என்பதால் இவை ஆரோக்கியமான கடற்சூழலுக்கு முக்கியமானவை. இந்த நிற மாற்றங்கள் கணினி மாதிரிகளுடன் ஒப்பிடப்பட்டு மனிதனால் புவி வெப்ப உயர்வு ஏற்படுத்தப்படாமல் இருந்தால் கடல்கள் எவ்வாறு இருக்கும் என்று ஆராயப்பட்டபோது இப்போது நிகழ்ந்து வரும் மாற்றங்களைப் பற்றி தெளிவாக அறிய முடிந்தது.

இந்த மாற்றங்களை வெப்ப மண்டல மற்றும் துணை வெப்ப மண்டலப் பகுதிகளில் உள்ள கடல்களில் குறிப்பிடத்தக்க அளவில் காணமுடிந்தது என்று கேல் கூறுகிறார். பூமியில் இருக்கும் கடல்களில் 56 வீத கடல்களிலும் இந்த மாற்றங்கள் நிகழ்கிறது. இது பூமியின் ஒட்டுமொத்த நிலப்பரப்பின் அளவை விட அதிகம்.

பெரும்பான்மையான கடற்பகுதிகளிலும் இந்த பசுமை விளைவு நிகழ்கிறது. ஆனால் நீல நிறம் மற்றும் சிவப்பு நிறத்தின் அளவுகள் ஒரு சில பகுதிகளில் சில சமயங்களில் அதிகமாவதையும் வேறு சில சமயங்களில் குறைவதையும் காண முடிகிறது என்று அவர் கூறுகிறார். ஒட்டுமொத்த சூழல் மண்டலத்தையும் அழிக்கக் கூடியதோ அல்லது மாற்றக் கூடியதோ இல்லை என்றாலும் இவை மிக நுட்பமானவை. மனித அறிவினால் இன்னும் முழுமையாகப் புரிந்து கொள்ளப்பட முடியாதவை.

மனிதக் குறுக்கீட்டின் மற்றொரு எடுத்துக்காட்டு

நம்மால் இன்னமும் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாமல் இந்த மாற்றங்கள் கடல்களில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. மனிதக் குறுக்கீட்டால் பூமியின் உயிர்க்கோளத்திற்கு ஏற்பட்டு வரும் மோசமான பாதிப்புகளுக்கு இது மற்றொரு சிறந்த எடுத்துக்காட்டு. இந்த ஆய்வுகள் காலநிலை மாற்றத்தின் இன்னுமொரு விளைவை தெளிவாக ஆவணப்படுத்தியுள்ளன.

என்றாலும் கடல்களுக்குள் எதனால் இந்த மாற்றங்கள் நிகழ்கின்றன, இந்த மாற்றங்கள் எந்த அளவு வலிமையானவை என்பது பற்றி ஆய்வாளர்களுக்கு இன்னும் தெளிவாகத் தெரியவில்லை என்று ஆரிகன் ஸ்டேட் பல்கலைக்கழகத்தின் கடல் வளம் ஆய்வு மையத்தின் விஞ்ஞானி மைக்கேல் ஜே பேரன்ஃபெல்டு கூறுகிறார்.

கடல்களில் நுண் பிளாஸ்டிக்குகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவது மற்ற எந்த ஒரு பொருளையும் போல ஒளியைச் சிதறடிக்கச் செய்யும். இது போன்ற பல காரணங்களால் இந்த மாற்றங்கள் ஏற்படலாம். இது பற்றி மேலும் தெளிவாக புரிந்து கொள்ளப்படும்போது கடலில் நிகழும் சூழலியல், உயிரி புவி வேதியியல் மாற்றங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் பற்றி நம்மால் புரிந்து கொள்ள முடியும் என்று ஆய்வாளர்கள் நம்புகின்றனர்.

### நாசாவின் புதிய செயற்கைக்கோள்

நாசா ஜனவரி 2024ல் பேஸ் என்று பெயரிடப்பட்டுள்ள அதி நவீன செயற்கைக்கோளை செலுத்துகிறது. இந்த அதிநவீன செயற்கைக்கோள் இப்போது ஆராயப்பட்டுள்ள ஒரு சில நிறங்களைத் தவிர கடல்களில் உள்ள நூற்றுக்கணக்கான நிறங்களையும் ஆராயும் திறன் பெற்றது. இதன் மூலம் கடற்சூழலில் உண்மையில் என்ன நடக்கிறது என்பதை நம்மால் தெளிவாக அனுமானிக்க முடியும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். இது கடற்சூழலை நாம் முழுமையாகப் புரிந்துகொள்ள உதவும் மிகப்பெரிய திருப்புமுனையாக அமையும் என்று நம்பப்படுகிறது.

# கனடாவிற்கு செல்லுதல்?




**யதீந்திரா**

தமிழர் வாழ்வில் புலப்பெயர்வு மிகவும் கவர்சிகரமான ஒன்று. எவருக்கு புலம்பெயர விரும்பமில்லை என்று கேட்டால் - இல்லையென்று சொல்பவர்கள் அரிதானவர்களாகவே இருக்க முடியும். அந்தளவிற்கு அது ஒரு கவர்சிமிக்க வாழ்வாகிவிட்டது. தமிழர் அரசியலில் தீர்க்கதரிசிகள் எவரும் இருந்ததாக தெரியவில்லை. செல்வநாயகம் தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டுமென்று ஒரு முறை கூறியிருந்தார். அதனையும் ஒரு தீக்கதரிசன பார்வையென்று கூறிவிட முடியாது - ஏனெனில், கடந்த 74 வருடகால அரசியல் நகர்வில், தமிழ் மக்களை கடவுளும் காப்பாற்றவில்லை.

இருந்ததையும் இழந்து, இருப்பதையும் பாதுகாக்க முடியாதவொரு கையறு நிலையில்தான் தமிழினம் திண்டாடிக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் வாய்ப்புள்ள ஒவ்வொருவரும் எவ்வாறு மண்ணைவிட்டு ஓடலாமென்றே சிந்திக்கின்றனர். இந்த இடத்தில் உண்மையிலேயே ஒரு தீர்க்தரிசி பற்றி கூறுவதனால், முறிந்த பனையின் ஆசிரியர்களில் ஒருவரான, படுகொலை செய்யப்பட்ட ரஜனி திரணகமவைத்தான் குறிப்பிட முடியும். முறிந்த பனையில் பின்பக்கத் தில் சில வரிகளுண்டு. அதாவது, எரி கின்ற தேசத்தை விட்டுவிட்டு ஒவ்வொரு புத்தியுள்ள மனிதனும் ஓடிக் கொண்டிருக்கின்றான். இன்றைய புலப்பெயர்வு கவர்சியை உற்று நோக்கும் போது, அந்த வரிகள் தீர்க்கதரிசனம் மிக்கவைதான். ஆன்று ஓட ஆரம்பித்த தமிழன் ஓடு வதை நிறுத்தவேயில்லை. ஆரம்பத்தில் ஓடியவர்களுக்கு, ஓடியதற்கான காரணம் இருந்தது, இன்றோ, வெறும் வெளி நாட்டு கவர்ச்சி மட்டுமேயிருக்கின்றது.

கனடிய அரசாங்கம் அதன் குடிவரவு கொள்கையை தளர்த்தியிருக்கின்றது. ஆசியாவை சேர்ந்தவர்களுக்கு கனடாவின் கதவு சற்று அகலமாகவே திறந்திருக்கின்றது. இதுதான் சந்தர்ப்பம் என்று கருதும் மத்தியவர்க்க தமிழர்கள் ஓடிக் கொண்டிருக்கின்றனர். 50 வயதை கடந்தவர்களைக் கூட ஆசை விடவில்லை. அவர்களை பொறுத்த வரையில் எங்களுடைய பிள்ளைகளுக்கு நல்ல தொரு வாழ்வு கிடைக்கும்தானே என் கின்றனர். பல வருடங்களுக்கு முன்னர் கனடாவிற்கு குடிபெயர்ந்த கவிஞர் ஒருவர், ஒரு நேர்காணலில் கூறியதை இப்போது நினைத்துக் கொள்ள வேண் டியிருக்கின்றது. எதற்காக கனடா வந்தீர் கள் என்று கேட்டதற்கு அவர் கூறிய பதில். கனடா அழகானதொரு நாடு. எனது ஆய்வுகளுக்கு சிறந்த நாடு. அந்தக் கவிஞரோ, தமிழ் தேசியத்தை செப்பனிட நினைத்த அறிஞர்களில் ஒருவர். அவரைப் போன்றவர்களால் செப்பனிட முடிந்ததா என்பது வேறு விடயம். அவ்வாறான ஒருவரே, இலங்கை அசிங்கம், கனடா அழகென்று எண்ணும் போது, சாமானிய மனிதர்கள் கனடாவை எண்ணி ஆசைப்படுவதில் என்ன தவறுண்டு. வறிய நாடுகளில் வாழ்வோர், வசிதியுள்ள நாட்டை நோக்கி செல்ல எண்ணுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

தங்கள் எதிர்காலத்தை கனடாவிலும், மேற்குலக நாடுகளிலும் கழிக்க வேண்டுமென்று எண்ணும் தமிழர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. பக்கத்து வீட்டிலுள்ளவர்கள், தங்களுடை உறவினர்கள் கனடாவில்




இருக்கின்ற போது, அதனைப் பார்த்து மனம் வெந்து, தங்களுக்கு அந்த வாய்பில்லையே - என்று எண்ணும் தமிழர்கள் ஏராளம். இந்த மனோநிலைதான், வாய்ப்புக்கள் கிடைக்கும் போது, அவர்களை ஓடச் செய்கின்றது. தமிழர் தாயகமென்று அடையாளப்படுத்தப் படும், வடக்கு கிழக்கிலிருந்து ஏற்கனவே, பன்னிரண்டு லட்சம் வரையானவர்கள் வெளியேறிவிட்டனர். தொடர்ந்தும் வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். இன்னும் பத்து வருடங்களில் தமிழ் தேசியம் பேசிக் கொண்டிருக்கும் கட்சிகளுக்கு வாக்களிப்பதற்கே குறிப்பிட்டளவான மக்கள் இருக்கப் போவதில்லை. வசதியில்லாத ஏழை மக்களே இறுதியில் தாயகத்தில் எஞ்சப் போகின்றனர். அவர்களின் பிரதான பிரச்சினை அடையாளமோ, அல்லது தேசியமாகவோ இருக்காது. அவர்களின் முதல் பிரச்சினை தாங்கள் பசியின்றி, வாழ்வதாக மட்டுமே இருக்கும்.

தமிழ் மக்கள் தங்களை தாங்களே தீர்மானித்து வாழ்வதற்கான அரசியல் ஏற்பாடு ஒன்று வேண்டும். அதன் மூலம் மட்டும்தான், தமிழர்கள் தன்னிறைவாக வாழ முடியும். இதுதான் நமது அரசியல் சுலோகம். இந்தச் சுலோகத்திற்கு வயதோ முக்கால் நூற்றாண்டு. 1949இல் இலங்கை தமிழரசு கட்சி, அதன் ஆங்கிலப் பெயராக, சமஸ்டியை முன்நிலைப் படுத்திய காலத்திலிருந்து, எங்களது சமஸ்டி வரலாறு நீண்டுசெல்கிறது. அம்புலி மாமாக் கதையில் வருகின்ற, விக்கிரமாதித்தியன் வேதாளத்திற்கு கதை சொல்வது போன்று, நாங்களும் எங்களு டைய மக்களுக்கு சமஸ்டிக் கதையை கூறிவருகின்றோம். ஆனாலும் எங்களால் ஒரு சிறிய முன்னேற்றத்தைக் கூட காண் பிக்க முடியவில்லை. புலம்பெயர் சமூகம் பெரியதொரு பலமென்று கூறிய போதி லும் கூட, நடைமுறையில் இதுவரையில் அந்தப் பலத்தை காண்பிக்க முடிய வில்லை. வடக்கு கிழக்கில் புலம்பெயர் முதலீடுகள் பெரியளவில் குவியும் போது, தமிழ் மக்கள் மத்தியில் தொழில் துறைகள் உருவாகும், அதனால் மேலதிக புலப்பெயர்வை கணிசமானளவில் தடுக்க முடியுமென்றெல்லாம் எதிர்பார்ப்புக்கள் உண்டு.

இது பற்றி பேசியவுடன், நம்வர்கள் பலர் முன்வைக்கும் கேள்வி - புலம்பெயர் முதலீடுகளுக்கு என்ன உத்தரவாதம்? உத்தரவாதம் இல்லையென்று கூறிக்கொண்டிருந்தால், இன்னும் பல தசாப்பதங்களுக்கு கூறிக்கொண்டிருக்கலாம். நாம் மாற்று வழிகளை ஆராய வேண்டும். தமிழ் நாட்டில் நிறுவனங்களை பதிவு செய்து, இந்திய முதலீடாக புலம்பெயர் முதலீடுகளை கொண்டுவர முடியும். அதற்கான பாதுகாப்பை இந்தியா வழங்கும். இல்லாவிட்டால், ஒரு கனடிய நிறுவனத்தின் ஊடாக, அமெரிக்க நிறுவனத்தின் ஊடாக உள்வரலாம்.

2015இல், எனது நண்பர்களின் அழைப்பில் நேர்வேக்கு சென்றிருந்த போது, இந்தக் கருத்தை, நோர்வே வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளுக்கு கூறியிருந்தேன். முதலீடுகள் தொடர்பில் அச்சமிருந்தால், நோர்வேஜிய முதலீடாகக் கொண்டுவாருங்கள். ஒரு வெளிநாட்டு முதலீடாக வரும்போது, அதற்கு சர்வதேச பாதுகாப்புண்டு. புலம்பெயர் சமூகமென்னும் அடையாளம் தேவையில்லை. குறித்த நாடுகளின் அடையாளம் மட்டும்தான் இருக்கும். இந்த அடிப்படையில் சிந்திக்காமல், அனைத்தையும் கறுப்பு வெள்ளையாக சிந்தித்தால், தாயகத்தை காப்பது வெறும் கனவாக மட்டுமே இருக்க முடியும். சாத்தியமான வழிகளில் சிந்திப்பவர்களுக்கு, அவ்வாறு சிந்திப்பவர்களை ஊக்குவிப்பதற்கு நம்மத்தியில் ஆதரவில்லை. வெறும் உணச்சிப் பிளம்பாக காட்சியளிக்கும் ஆட்களே நம் மத்தியில் அதிகம். கடந்த 14 வருடங்களில் இந்த உணச்சிப்பிளம்பால் எதனையாவது சாதிக்க முடிந்ததா?

ஒரு நிலப்பரப்பை பாதுகாப்பதற்கு சனத்தொகை அவசியம். சனத்தொகை வீழ்சியடைந்து செல்லும் போது, அந்த நிலப்பரப்பை அடையாளப்படுத்துவதற்கான தார்மீக தகுதியை குறித்த மக்கள் கூட்டம் இழந்துவிடும். கிழக்கு மாகாணம் இன்று மூவினங்களும் வாழ்கின்ற ஒரு மாகாணம். இந்த பின்புலத்தில் ஏற்கனவே, கிழக்கு மாகாணம் தமிழர் பகுதியென்னும் அடையாளத்தை இழந்துவிட்டது. நாங்கள் வேண்டுமானால் அவ்வாறு உச்சரித்துக் கொண்டு, எங்களை நாங்களே ஆசுவாசப் படுத்திக் கொள்ளலாம். கிழக்கு என்பது, இப்போது மூவின மக்களும் வாழும் பகுதி. வடக்கு மாகாணத்தின் நிலைமையும் இன்னும் பத்துவருடங்களின் பின்னர் இப்போதிருப்பது போன்று இருப்பதற்கான வாய்ப்பில்லை. யாழ்ப்பாணத்தை பொறுத்தவரையில் அதிகமான பகுதிகளில் வீடுகள் மட்டுத்தான் இருக்கும் - ஒரு வேளை அந்த வீடுகளில் வெளிநாட்டு குளிர் ஒத்துக் கொள்ளாத முதியவர்கள் இருக்கலாம். இதுதான் தமிழரின் நிலையென்றால், யாரை முன்னிலைப்படுத்தி, நாங்கள் அரசியல் தீர்வு தொடர்பில் பேசிக் கொண்டிருக்கின்றோம்? வசிதியுள்ள மேற்குலக நாடுகளை நோக்கிச் செல்வதுதான், பெரும்பாலான தமிழரது கனவென்றால், அவ்வாறானவர்களுக்கு எதற்காக அரசியல் தீர்வு. அரசியல் தீர்வு, நமது நிலத்தை விட்டால் வேறு வழியில்லை என்பவர்களுக்கல்லவா!

அடைந்தால் மகா தேவி இல்லாவிட்டால் மரண தேவி என்னும் நிலையில், சிந்தித்துக் கொண்டிருந்தால், எதிர்காலத்தில், தாயகமென்று அடையாளப்படுத்துவதற்கு எதுவுமிருக்காது. பின்னர், விகாரைகள் வருகிறதென்று, வீதிகளில் சிலர் கூடி சத்தமிடுவதில் பொருளில்லை. இன்னும் பத்துவருடங்களில் வடக்கு கிழக்கை பிரதிநித்துவம் செய்யும் தமிழ் நாடாளுமன்ற எண்ணிக்கை பத்து தொடக்கம் பன்னிரெண்டுக்குள் முடங்கலாம். மக்கள் தொடர்ந்தும் வெளியேறிக் கொண்டிருந்தால், எங்களிடம் எஞ்சியிருக்கும் ஜனநயாக பிரதிநித்துவ பலத்தையும் சிறுகச் சிறுக இழப்போம். இதனை கருத்தில் கொண்டு சிந்திக்க மறுப்பவர்கள் தமிழ் மக்களுக்கு நன்மைசெய்பவர்கள் அல்லர். ●









# முஸ்லிம் சமூகத்தின் ஆளும் கட்சி சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸே!

## சாய்ந்தமருதில் ஹக்கீம்

*நிந்தவூர், செப். 18*

“முஸ்லிம் காங்கிரஸ் எனும் பேரியக்கம் நாட்டின் ஆட்சிக் கதிரைகள் பக்க மிருந்தாலும், எதிர் தரப்பிலிருந்தாலும் முஸ்லிம் சமூகத்தின் ஆளும் கட்சி முஸ்லிம் காங்கிரஸேதானாகும். -

இவ்வாறு சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் கூறினார்.

சாய்ந்தமருதில் பெரும் எழுச்சியுடனும், பெருமளவு மக்களின் பங்குபற்றுதலுடனும் இடம்பெற்ற முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம். எச். எம். அஷ்ரபின் 23 ஆவது வருட நினைவேந்தல் நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதான நிகழ்வாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நினைவேந்தல் நிகழ்வு சாய்ந்தமருது பௌஸி மைதானத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் நடைபெற்றது.

முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும், முன்னாள் இணைந்த வடகிழக்கு மாகாண சபை உறுப்பினருமான ஏ. எல். அப்துல் மஜீத் தலைமையில் நடைபெற்ற நிகழ்வின் ஆரம்பத்தில் மர்ஹூம் அஷ்ரபின் நினைவாக கத்தமுல் குர்ஆன் ஓதிதமாம் செய்யப்பட்டதுடன், விசேட துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றது.

நிகழ்வில் இந்திய தமிழ் நாடு பேராசிரியர் முனைவர் அப்துல் காதர் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டார்.

கல்முனை மாநகர முன்னாள் மேயர் கலாநிதி சிராஸ் மீராசாகிபின் வரவேற்புரையுடன் ஆரம்பமான நினைவேந்தல் நிகழ்வில், தலைவர் ரவூப் ஹக்கீம் தொடர்ந்து உரையாற்றுகையில் பின்வருமாறு கூறினார்.

மறைந்த தலைவர் மர்ஹும் அஷ்ரப் தமது அந்திம காலத்தில் முன்னெடுத்து விட்டுச் சென்ற விடயங்கள் பல உள்ளன. முக்கியமாக அவர் அந்திம காலத்தில், கட்சியோடு முரண்பட்டிருந்தவர்கள் மற்றும் மாற்றுக்கட்சிகளில் இணைந்திருந்தவர்களை வீடு வீடாகச் சென்று சந்திப்புகளை நடத்தி முஸ்லிம்காங்கிரசுக்குள் உள்வாங்கும் முயற்சிகளைச் செய்து வெற்றியும் கண்டார்.

அந்த வகையில் வெளியிலுள்ளவர்களையும் நமது பாசறையில் இணைப்பதற்கான முயற்சிகளை நாம் முன்னெடுக்க வேண்டும்.

இதற்காக முஸ்லிம் காங்கிரஸின் கதவு இனிஎப்போதும் திறந்தேயிருக்கும்.

எமது அரசியலைப் பொறுத்தவரை அஷ்ரப்புக்கு முன்பும், பின்பும் என்றே எழுதப்படும்.

இந்த வகையில் முஸ்லிம் காங்கிரஸை மலினப்படுத்தி, சிறுமைப்படுத்தி சிதைத்து விடும் எத்தகைய முயற்சிக்கும் இடமளிக்க முடியாது.

இருப்பினும் அனைவருக்கும் நியாயம் செய்யும் தலைவனாகவே கட்சியின் செயல்பாடுகளை நான் முன்னெடுத்து வருகின்றேன்.

முஸ்லிம் காங்கிரஸை தொடர்ந்தும் முஸ்லிம்கள் அனைவரதும் பாசறையாகவும், அரவணைக்கும் அரசியல் பாசறையாகவும் முன்கொண்டு செல்வோம்” என்றார்.

முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் சிரேஷ்ட சட்டத்தரணி நிஸாம் காரியப்பர், பிரதித் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம்.ஹரீஸ் பிரதிப் பொருளாளர் ஏ.சி.யஹியாகான் ஆகியோரும் உரையாற்றினர்.

முன்னாள் அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா உட்பட கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ-06)




